# திறந்த அரசாங்கப் பங்குடைமை

## இலங்கையின் 2 வது தேசிய செயல் திட்டம்

## 2019 – 2021

# பொருளடக்கம்


1. அறிமுகம்

2. இன்றுவரையிலான திறந்த அரசாங்க முயற்சிகள்

3. தேசிய செயல் திட்ட அபிவிருத்திச் செயல்முறை

4. உறுதி மொழிகள்

5. நடைமுறைக்கிடுதலும், கண்காணிப்பும்

## 1. அறிமுகம்

2015 அக்டோபர் 28 ஆம் திகதி இலங்கை திறந்த பொருளாதாரப் பங்குடைமை அமைப்பில் (OGP) அதன் 68 ஆவது அங்கத்துவ நாடாக இணைந்துகொண்டது. இந்த அமைப்பு தனது OGP வருடாந்த உச்சி மாநாட்டில் திறந்த அரசாங்கப் பிரகடனத்தை அங்கீகரித்து, ஏற்றுக்கொண்டது. OGP என்பது ஆட்சிமுறையை வலுப்படுத்தும் வகையில் ஒளிவுமறைவின்மையை முன்னேற்றி, பிரசைகளுக்கு அதிகாரவலுவளித்து, ஊழலுக்குக்கெதிராகப் போராடும்வகையில் புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்துவதாக அரசாங்கங்களிடமிருந்து காத்திரமான அர்ப்பணிப்பு உறுதிமொழியை பெற்றுக் கொள்வதற்கான ஒரு பல்தரப்பு முன்முயற்சியாகும். தற்போது OGP 75 பங்கேற்பு நாடுகளையும், உள்நாட்டுக் கொள்கை மறுசீரமைப்புகளில் கவனம் செலுத்தி, தேசிய செயல் திட்டங்களை நடைமுறைக்கிடும் 15 உப / தேசிய அரசாங்கங்களையும் உள்ளடக்குகின்றது. OGP யின் 2 வருட செயல் திட்டங்கள் தமது பிரசைகளின் நன்மை கருதி, திறந்த ஆட்சி முறையை முன்னேற்றும் வகையில் OGP யில் பங்கேற்கும் அரசாங்கங்கள் உயர்வாக மதிக்கவேண்டுமென்று எதிர்பார்க்கப்படும் நான்கு விழுமியங்களை அடிப்படையாகக் கொண்டவையாகும். அவை பின்வருமாறு:

1. வெளிப்படைத்தன்மை
2. வகைப்பொறுப்பு
3. பொதுமக்கள் பங்கேற்பு
4. வெளிப்படைத் தன்மைக்கும், வகைப்பொறுப்புக்குமான தொழில்நுட்பமும், புதிது புனைதலும்.

செயல் திட்டங்கள் பரந்த நிலையிலான பிரசைகள் மற்றும் சிவில் சமூகத்தின் கலந்தாலோசனையுடன், உறுதி மொழிகளும், மைல் கற்களும் அனைவரையும் அரவணைப்பதாகவும், பிரசைகளின் தேவைகளுக்கு பிரதிவிளைவு காண்பிப்பவையாகவும் இருப்பதை உறுதிப்படுத்தும் வகையில் வகுத்தமைக்கப்படுகின்றன.

இலங்கை அரசியலமைப்புக்கான 19வது திருத்தத்தில் தகவலுக்கான உரிமையை அங்கீகரித்ததுடன் OGP யில் இணைந்துகொள்ளும் தகுதியைப் பெற்றுக்கொண்டது. OGP அமைப்பின் பணிப்பாணையின் கீழ் இலங்கை தனது முதலாவது 2 வருட தேசிய செயல் திட்டத்தை 2014 பெப்ருவரியில் ஆரம்பித்தது. அது பின்னர் 2016 ஒக்தோபரில் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டது. முதலாவது OGP செயல் திட்டம் (NAP) 9 தொனிப்பொருள் விடயப்பரப்புகளாக ஒழுங்கமைக்கப்பட்ட மொத்தம் 12 உறுதிமொழிகளைக் கொண்டிருந்தது. இவை சுகாதாரம், கல்வி, ICT, சூழல், உள்ளூராட்சி, பெண்கள், அரசியல் ஆட்சி முறையில் பெண்கள், ஊழல் எதிர்ப்பு மற்றும் தகவலுக்கான உரிமை என்பவை ஆகும். முதலாவது தேசிய செயல் திட்டம் வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் வழிகாட்டலின்கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டதோடு, தகவல் அறியும் உரிமை தொனிப்பொருளின்கீழான உறுதிமொழிகள் நடைமுறையாக்கக் காலப்பகுதியின் இறுதியில் முக்கிய அர்ப்பண உணர்வுகளாகப் பரிணமித்தன.

இங்கு சமர்ப்பிக்கப்படும் இரண்டாவது தேசிய செயல் திட்டம் சனாதிபதி செயலகத்தின் வழிநடத்தலுடன்கூடிய ஒரு கூட்டிணைப்பு மற்றும் கலந்தாலோசனை செயல்முறையின் விளைவாகும். தேசிய செயல் திட்டம் மாற்றுத் திறனாளிகளின் உரிமைகளை மேம்படுத்துவதிலிருந்து, சொத்துப் பிரகடனங்கள் மற்றும் இடர் முகாமைத்துவம் சம்பந்தமான மேம்படுத்தப்பட்ட சேவைகளை வழங்குவது ஆகியவற்றின் வாயிலாக வகைப்பொறுப்பை மேம்படுத்துவது வரையிலான 15 நிலைமாற்றுக் கடப்பாடுகளை உள்ளடக்கியுள்ளது. முறையே அரசாங்க முகவர் நிலையங்கள் ஒவ்வொரு மைல் கல்லையும், உறுதிமொழியையும் ஈட்டிக்கொண்டு, நடைமுறைப்படுத்துவதற்கு வாக்குறுதி வழங்கியுள்ளபோதிலும், சிவில் சமூக அமைப்புகளும் ஒரு கண்காணிப்பு, மதிப்பீடு மற்றும் கற்றல் சட்டகத்தினூடாக (MEL) தேசிய செயல்திட்டத்தின் நடைமுறையாக்கத்திற்கு ஆதரவு வழங்கும்.

இரண்டாவது தேசிய செயல் திட்டம் பிரசைகளுக்கு அரசாங்கத்தின் வகைப்பொறுப்பை அதிகரிக்கும் வகையில் அதிகரித்த வெளிப்படைத்தன்மை மற்றும் ஆட்சி செயல்முறைகளில் பிரசைகளின் பங்கேற்பை அதிகரிக்குமென்ற நம்பிக்கை உள்ளது.

## 2. இன்றுவரையிலான திறந்த அரசாங்க முயற்சிகள்

திறந்த அரசாங்க பங்குடைமையில் இணைந்த காலத்திலிருந்து இலங்கை அரசாங்கம் அரசாங்கத்தின் பல்வேறு அடுக்குகளில் திறந்த ஆட்சிமுறைக் கோட்பாடுகளை முன்னேற்றி, நிலைநாட்டும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்துள்ளது. இந்த விடயம் சம்பந்தமான ஒரு முக்கிய சாதனை பிரசைகளிடையே தகவலுக்கான உரிமையின் பயன்பாட்டை (RTI) முன்னேற்றும் நடவடிக்கையும்,

தகவலுக்கான உரிமைச்சட்டத்தின் நடைமுறையாக்கத்திற்காகப் பகிரங்கத்துறைக்கு வழங்கப்பட்ட பயிற்சியும் ஆகும். முதலாவது செயல் திட்டத்தில் தகவலைப் பெற்றுக்கொள்ளும் உரிமை சம்பந்தமாக இடம்பெற்ற உறுதிமொழி இயைபுள்ள அரசாங்க நிறுவனங்கள் நடைமுறையாக்கத்தை வழிநடத்துவது குறித்த மேலும் வெற்றிகரமான அர்ப்பண உணர்வாக அமைந்துள்ளது.

2017 மே மாதத்தில் வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் அழைப்பின்பேரில் மொங்கோலியா அமைச்சரவை செயலகத்தின் தவிசாளர் கௌரவ ஜே.மங்கப்ட் தலைமையில் உள்ளூராட்சி அதிகாரசபை நகரபிதாக்கள் மற்றும் ஆசனத் தவிசாளர்களையொத்த மொங்கோலியாவின் உள்ளூராட்சி சபைகளின் 25 தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள் இலங்கைக்கு விஜயம் செய்தனர். இந்த வருகையின் நோக்கம் இலங்கை அரசாங்க நிறுவனங்கள் நடைமுறைக்கிடும் திறந்த அரசாங்க முன்னெடுப்புகள் குறித்து அறிந்து கொள்வதாகும். தூதுக்குழு அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளும் வகையிலும், ஒருவரிடமிருந்து ஒருவர் கற்றுக்கொள்ளும் வகையிலும் இலங்கையின் உள்ளூராட்சி பிரதிநிதிகளையும், OGP அமைப்புடன் இணைப்புற்ற சிவில் சமூகப் பிரதிநிதிகளையும் சந்தித்தது.

அரசாங்கம் உலகளாவிய மட்டத்தில் OGP பங்காளர்களுடன் இணைப்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்கும் பிரயத்தனங்களை மேற்கொண்டுள்ளது. இந்த வருடம் ஜூலை மாதம் இலங்கை சனாதிபதி அதிமேதகு மைத்திரிபால சிறிசேன ஜோர்ஜியா, திப்லிஸியில் இடம்பெற்ற வருடாந்த OGP உச்சிமாநாட்டின் உலகளாவிய அமர்வில் பிரசன்னமாகவிருந்தார். இங்கு அவர் ஊழலை எதிர்த்துப் போராடுவதற்கு அரசாங்கம் மேற்கொண்டுள்ள விசேட முயற்சிகள் சம்பந்தமான கருத்துகளை எடுத்துரைத்ததோடு, “அங்கத்துவ நாடுகளில் மேற்கொள்ளப்படும் OGP தீர்மானங்களை எவ்வாறு மக்களின் நலன் மற்றும் அனுகூலத்திற்கு பயன்படுத்தலாம்?” என்னும் கருப்பொருளுக்கும் பிரதி விளைவைக் காண்பித்தார்.

## 3. தேசிய செயல் திட்ட அபிவிருத்திச் செயல்முறை

OGP யின் இரண்டாவது செயல் திட்டம் அரசாங்க மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகள் ஒரு கூட்டு முயற்சியாக அர்ப்பண உணர்வுகளையும், மைல் கற்களையும் வகுத்தமைத்த ஒரு கூட்டு – உருவாக்கச் செயல்முறையினூடாக உருவாக்கப்பட்டதாகும். சுனாதிபதி செயலகத்தின் வழிகாட்டலுடனும், OGP சிவில் சமூகப் பங்காளர்களின் ஆதரவுடனும் இடம்பெற்ற கூட்டு உருவாக்கச் செயல்முறை முதலாவது தேசிய செயல் திட்டத்தின் மீளாய்வு மற்றும் சகல அரசாங்க மற்றும் CSO அங்கத்தவர்களின் பங்கேற்புடன் கொழும்பு (ஜூன் 18) புத்தளம் (ஜூன் 19) யாழ்ப்பாணம் (ஜூன் 21) திருகோணமலை (ஜூன் 22), கேகாலை (ஜூன் 28), காலி (ஜூன் 29), அனுராதபுரம் (ஜூலை2), கண்டி (ஜூலை 4) மற்றும் பதுளை 2018 (ஜூலை 5) ஆகிய ஒன்பது மாகாணங்களிலும் இடம்பெற்ற 9 கலந்தாலோசனைக் கூட்டங்களுடன் ஆரம்பித்ததாகும். பொதுமக்களும், அரசாங்கப் பிரதிநிதிகளும் பங்கேற்ற இந்தக்கூட்டங்களில் தண்ணீர் இல்லாமை மற்றும் துப்புரவு போன்ற விடயங்களிலிருந்து, ஊழலைத் தவிர்த்தல், வரவு - செலவுத் திட்ட வெளிப்படைத்தன்மைகளுக்கான தேவை, கல்வி முறைமையில் உள்ள குறைபாடுகள் மற்றும் இடரான சூழ்நிலைகள் காரணமாக எழும் பிரச்சினைகள் வரையிலான ஒரு வீச்சிலான எண்ணற்ற விவகாரங்கள் குறித்து எடுத்துரைக்கப்பட்டது. இக்காலப்பகுதிகளில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்ட அச்சு ஊடக விளம்பரங்களுக்குப் பிரதிவிளைவாக தமது விதப்புரைகளை எழுத்துமூலமாகச் சமர்ப்பிக்கும் சந்தர்ப்பமும் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக, அரசாங்க அமைச்சுகளும், முன்னணித் திணைக்களங்களும் திறந்த ஆட்சிமுறை சம்பந்தமாக தமது விதப்புரைகளை வழங்குமாறும் அழைப்பு விடுக்கப்பட்டது. அரசாங்கத்தினாலும், சிவில் சமூகத்தினாலும் கலந்துரையாடப்பட்டு, வகுத்தமைக்கப்பட்ட விவகாரங்கள் மற்றும் தொனிப்பொருள் விடயப்பரப்புகளின் குறுநிரல் இந்த மூலங்கள் அனைத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளப்பட்டதாகும்.

## 4. கடப்பாடுகள்


| | |
|---|---|
| உறுதிமொழி #1: பொது அதிகாரசபைகளில் நேர்மையான அதிகாரிகளின் இருப்பின் ஊடாக இலஞ்சம் மற்றும் ஊழலை தடுப்பதற்கான பொது ஈடுபாட்டினை மேம்படுத்தல். | 4 |
| உறுதிமொழி #2: சமர்ப்பித்தல், சரிபார்த்தல் மற்றும் பொது அணுகும் வசதியை எளிதாக்குவதற்கு ஒரு வினைத்திறன் மிக்க சொத்து பிரகடன முறைமையை ஸ்தாபித்தல். | 6 |
| உறுதிமொழி #3: நிதி மற்றும் ஊடக அமைச்சானது குடிமக்கள் மத்தியில் தகவல் அறியும் உரிமையின் பயன்பாட்டினை அதிகரித்து, 2020 அளவில் தகவல் அறியும் உரிமை நடைமுறைப்படுத்தலுக்கு பொது அதிகாரிகளின் பிரதிவினையை மேம்படுத்தல். | 8 |
| உறுதிமொழி#4: சுகாதார துறை அபிவிருத்தியில் குடிமக்கள் பங்குபற்றலுக்கான நிலையான பொறியமைப்பு ஒன்றை ஸ்தாபித்தல். | 10 |
| உறுதிமொழி #5: 2020 அளவில் போதைப்பொருட்கள், புகையிலை, மது மற்றும் ஏனையவற்றிற்கு 'இல்லை' என்று சொல்வதற்கு பாடசாலை மாணவர்களின் நடத்தையை மாற்றல். | 12 |
| உறுதிமொழி #6: GIC-1919, அரசாங்க இணையத்தளங்கள் மற்றும் திறந்த தரவு எண்ணிம தளங்களினை மேம்படுத்துவதன் மூலம் செலவு குறைந்த மற்றும் நம்பகமான அரசாங்க தகவல் சேவைகளை வழங்கல். | 14 |
| உறுதிமொழி #7: விவசாய தீர்மானம் எடுத்தல் ஆதரவு மற்றும் விவசாய வர்த்தக ஆதரவு முறைமையின் ஊடாக விவசாயிகளை வலுப்படுத்தல். | 16 |
| உறுதிமொழி #8: 3200 அடையாளங் காணப்பட்ட குறைந்த வருமான குடும்பங்களுக்கான வீடுகளை ஒதுக்கலை தீர்மானிப்பதில் மாற்றுத்திறனுடைய நபர்களின் பங்குபற்றலுக்கான பொறியமைப்பு ஒன்றினை 2020 இறுதியில் நடைமுறைப்படுத்தல். | 18 |
| உறுதிமொழி #9: UNCRPD உடன் இசைந்ததாக பொது மக்களின் பங்குபற்றலுடன் மாற்றுத்திறன் உரிமைகள் சட்டமூலத்தை உருவாக்கி,2020 அளவில் பாராளுமன்றத்தால் இயற்றுதல். | 20 |
| உறுதிமொழி #10: பங்கேற்பு முறையுடன் அனர்த்த முகாமைத்துவச் செயற்பாடுகளை அனர்த்த முகாமைத்துவத்திற்கு பொறுப்பான அமைச்சு அடையாளங் கண்டு, தயாரித்து, நடைமுறைப்படுத்தி, கண்காணித்தல். | 22 |
| உறுதிமொழி#11: தேசிய சுற்றுச்சூழல் கொள்கையில் காலநிலை மாற்ற சவால்கள் முழுமையான உள்ளீர்க்கப்பட்டு, சுற்றுச்சூழலுக்கு பொறுப்பான அமைச்சினால் பங்கேற்பு முறையில் செயற்படல். | 24 |
| உறுதிமொழி#12: 2020 அளவில் சம்பந்தப்பட்ட அமைச்சுக்களின் செயற்றிட்டங்களில் பெண்களுக்கு எதிரான அனைத்து வன்முறைகளை ஒழிப்பது தொடர்பான சாசனத்தின் (CEDAW) தெரிவு செய்யப்பட்ட நிறைவு அவதானிப்புக்களை நடைமுறைப்படுத்துவதற்கு வெளிப்படையான மற்றும் பதிலளிக்கக் கூடிய செயற்பாடு ஒன்றினை ஸ்தாபித்தல். | 26 |
| உறுதிமொழி #13: உள்ளக சேவை விநியோகத்தை மேம்படுத்துவதற்கு குடிமக்கள் பங்கு பற்றலுடன் பிரதேச சபைகளில் குழு முறைமையை வலுப்படுத்தல். | 29 |
| உறுதிமொழி #14: பயணிகளின் தேவை மற்றும் பின்னூட்டத்தின் அடிப்படையில் பொது பேருந்து போக்குவரத்தை மேம்படுத்தல். | 31 |
| உறுதிமொழி #15: சிறுவர் தொடர்பான ஐநா சமவாயத்தின் இறுதி அவதானிப்புகளை ஒரு பங்கேற்கு முறையில் அமுல்படுத்துவதன்மூலம் பிள்ளைநேய சூழலொன்றை ஏற்படுத்துவதை ஊக்குவித்தல் | 33 |

| உறுதிமொழி # 1: பொது அதிகார சபைகளில் நேர்மையான அதிகாரிகளின் இருப்பின் ஊடாக இலஞ்சம் மற்றும் ஊழலை தடுப்பதற்கான பொது ஈடுபாட்டினை மேம்படுத்தல். | |
|---|---|
| 1 அக்டோபர் 2018 – 30 செப்ரம்பர் 2020 | |
| முன்னணி நடைமுறைப்படுத்தல் நிறுவனம்/செயற்பாட்டாளர் | இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு (CIABOC) |
| **உறுதிமொழி விளக்கம்** | |
| உறுதிமொழி அடையாளப்படுத்தப் போகும் பொதுப் பிரச்சினை என்ன? | ஊழல் காரணமாக பொது துறையின் நேர்மை தொடர்பில் குறைந்தளவு நம்பிக்கையே உள்ளது. பணம் பறித்தல் மற்றும் இலஞ்ச கோரல்கள் போன்ற ஊழலில் இருந்து குடிமக்களுக்கு துன்பங்கள் பரவுகின்றன. ஆனால், பதியப்பட்ட முறைப்பாடுகளை பின்தொடர முடியாதுள்ளது. நடைமுறைகள், செலவுகள், பொது சேவை ஒன்றை பெறுவதற்கு சம்பந்தப்பட்ட நேரம் என்பன தொடர்பில் போதிய விழிப்புணர்வு இன்மை என்பது சில பொது அதிகாரிகளால் சேவை பெறுனர்கள் கையாளப்படுவதற்கும், இலஞ்சம் எடுக்கவும் வழிகோலியுள்ளது. சேவை வழங்கலின் போது இலஞ்சம் மற்றும் ஊழலை எதிர்கொள்ளும் போது யாரிடம் செல்வது என குடிமக்களுக்கு தெரியவில்லை. பொது நிறுவனங்கள் மீதான அவர்களது நம்பிக்கையை இது குறைக்கின்றது. இலஞ்சம் மற்றும் ஊழலை தடுப்பதற்கு பல்வேறு சட்டங்களும், விதிமுறைகளும் அறிமுகப்படுத்தப்பட்ட போதிலும்,அவை பிரதானமாகஇலஞ்சம் மற்றும் ஊழல் சம்பவம் ஒன்று நிகழ்ந்தவுடன்,சட்டத்தை அமுல்படுத்தல் மற்றும் குற்றம் செய்தவர்களுக்கு தண்டனை விதித்தல் குறித்தே இலக்கு வைக்கின்றன. சட்டங்கள் மற்றும் விதிமுறைகளை நடைமுறைப்படுத்தல் மாத்திரம் இலஞ்சம் மற்றும் ஊழலற்ற கலாசாரம் ஒன்றை உருவாக்குவதற்கு விளைவினை ஏற்படுத்திவிடாது என CIABOC அவதானித்துள்ளது. |
| உறுதிமொழி என்ன? | தமது சமூகங்களில் ஊழலை வெற்றிகரமாக தடுத்துள்ள பெரும்பாலான நாடுகள், இலஞ்சம் மற்றும் ஊழலைத் தடுப்பதற்கான வினைத்திறன் மிக்க கருவி ஒன்றாக பொது சேவையில் நேர்மையை அதிகரித்தல் தொடர்பாக கவனம் செலுத்தியிருக்கின்றன.களின் உதவியுடன் பொது சேவை விநியோகத்தின் வழிகள் மற்றும் விதங்கள் தொடர்பில் குடிமக்களுக்கு கற்பிப்பதன் மூலம் பொது நிறுவனங்களில் நியமிக்கப்பட்ட நேர்மை அதிகாரி இலஞ்சம் வாங்குதல் மற்றும் ஊழலுக்கான சந்தர்ப்பங்களை குறைத்தலே இந்த உறுதிமொழியின் நோக்கமாகும்.நிறுவனங்களில் இருந்து பெற்றுக் கொள்ளக் கூடிய பொது சேவை, அது சார்ந்த நேரம் மற்றும் செலவு குறித்த சிறந்த விழிப்புணர்வை குடிமக்கள் கொண்டிருக்கும் போது,பொது அதிகாரிகள் அவர்களை தவறாக வழிநடத்துவதற்கான சந்தர்ப்பங்களை அது குறைப்பதுடன், அதன் ஊடாக இலஞ்சம் எடுத்தல் அல்லது ஊழலில் ஈடுபடுவதனையும் குறைக்கின்றது. இந்தச் செயற்பாட்டில், தமது நிறுவனங்களில் இலஞ்சம் அல்லது ஊழலை எவ்வாறு தடுப்பது என்பது குறித்தும் பொது துறை ஊழியர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும். |
| பொது பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உறுதிமொழியானது எவ்வாறு பங்களிக்கும்? | பொது சேவை விநியோகம் தொடர்பில் பொது நிறுவனங்களில் பரந்தளவு விழிப்புணர்வை உருவாக்குவதற்கும், மற்றும் அவர்களது சேவைகளைப் பெறுவதற்கு குடிமக்களுக்கு வசதியளிப்பதற்கும் நேர்மை அதிகாரிகளின் நியமனத்தை இந்த உறுதிமொழி வழங்கும்.குடிமக்கள் சாசனங்களை அமைத்தலுக்கு நேர்மை அதிகாரிகள் பொறுப்பாக இருப்பர். தேவையான சந்தர்ப்பத்தில் திணைக்களத் தலைவரின் வழிகாட்டலின் கீழ் குடிமக்களுக்கு வழிகாட்டலை வழங்குவதற்கு, சம்பந்தப்பட்ட சேவை வழங்கும் அதிகாரியுடன் தொடர்பாடலை வசதியளிப்பதற்கு, மற்றும் வினைத்திறன் மிக்க சேவை ஒன்று வழங்கப்படுவதனை உறுதி செய்வதற்கு ஒரு வசதியளித்தல் அதிகாரியை நியமிப்பார். மேலும், தெளிவு குறைவாக உள்ள சுற்றுநிருபங்களை எளிமைப்படுத்தவும், தெளிவுபடுத்தவும், மற்றும் அத்தகைய சுற்றுநிருபங்கள் சம்பந்தமாக குடிமக்கள் மற்றும் ஊழியர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவும் நேர்மை அதிகாரி பொறுப்பாக இருப்பார். ஒழுங்குக் கோவை, ஆர்வ முரண்பாட்டு விதிகள், அன்பளிப்பு விதிகள் மற்றும் சொத்து பிரகடனம் செய்தல் என்பவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு மற்றும் இசைவதற்கான நடவடிக்கையையும் அவர்கள் எடுப்பர். |
| OGP விழுமியங்களுக்கு ஏன் இந்த உறுதிமொழி சம்பந்தப்படுகின்றது? | பொது நிறுவனத்திலிருந்து பெறக்கூடிய சேவைகள் தொடர்பில் குடிமக்களுக்கு வழிகாட்டலையும், வசதியளித்தலை வழங்குவதன் காரணமாக இந்த உறுதிமொழியானது **வெளிப்படைத்தன்மை** மற்றும் **பொது** |

| | |
|---|---|
| | **மக்கள் பங்கேற்பினை** முன்னிறுத்துகின்றது. நேர்மை அதிகாரிகளை கொண்டிருக்கும் இந்த முழுச் செயற்பாடும், பொது நிறுவனங்களின் செயற்பாடுகள் குறித்த தெளிவினை மேம்படுத்துவதனால்,**பொது பொறுப்புடைமையையும்** அது பரவலாக்குகின்றது. |
| மேலதிக தகவல்: | ஐக்கிய நாடுகளின் ஊழலுக்கு எதிரான சாசனத்தின் குறிக்கோள்கள் ஊழல் மற்றும் இலஞ்சத்தை குறைப்பதனை கோரும் நிலைத்திருக்கக் கூடிய அபிவிருத்தி இலக்கு இல. 16இன் நடைமுறைப்படுத்தல் மற்றும் தற்போது தயாரிக்கப்பட்டு வரும் ஊழலை எதிர்கொள்வதற்கான சிந்திக்கப்பட்ட தேசிய நடவடிக்கை திட்டம் ஒன்றின் நடைமுறைப்படுத்தல் உள்ளடங்கலாக CIABOC இன் தற்போதைய நடவடிக்கைகள் என்பவற்றுக்கு இந்த உறுதிமொழி ஆதரவளிக்கின்றது. |

| சரிபார்க்கக் கூடிய வழங்கக்கூடியவையுடன் மைற்கல் நடவடிக்கை | ஆரம்ப திகதி: | முடிவுத் திகதி: |
|---|---|---|
| 1. அனைத்து பொது நிறுவனங்களிலும் நேர்மை அதிகாரிகளை நியமிப்பதற்கான அமைச்சரவை அனுமதி பெறப்படல் மற்றும் அதற்கேற்ப சுற்றுநிருப அறிவுறுத்தல்கள் வழங்கல். | செப்ரம்பர் 2018 | ஜனவரி 2019 |
| 2. இலத்திரனியல், அச்சு மற்றும் எண்ணிம ஊடகம் மற்றும் பொது விழிப்புணர்வு பிரசாரம் என்பவற்றின் வழியாக நேர்மை அதிகாரிகளின் வகிபாகங்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளியிடப்படல். அனைத்து பொது நிறுவனங்களின் நுழைவாயிலிலும் மற்றும் இணையத்தளங்களிலும் நேர்மை அதிகாரியின் தொடர்பு விபரங்கள் மற்றும் செயற்பாடுகள் காட்சிப்படுத்தப்படல் (மும்மொழி மற்றும் பிறெய்ல் மொழி) | ஜனவரி 2019 | ஜூன் 2019 |
| 3. வழங்கப்படும் சேவைகளின் வகை, அத்தகைய சேவைகளுக்கான செலவு, வழங்கப்படும் நேரம் என்பன குறித்த தகவல்களை வழங்கும் குடிமக்கள் சாசனம்ஒவ்வொரு சேவை வழங்கும் நிறுவனத்திலும் காட்சிப்படுத்தப்படல். | ஜனவரி 2019 | ஜூன் 2019 |
| 4. நிறுவனத்தில் செயற்பாட்டில் உள்ள நடைமுறைகள் மற்றும் சுற்றுநிருபங்களை பரிசோதித்தல். அத்தகைய நடைமுறைகள் மற்றும் சுற்றுநிருபங்களில் தெளிவு குறைவாக இருப்பின் அல்லது சிக்கலாக இருப்பின், அவற்றை எளிதானதாகவும், தெளிவானதாகவும் மாற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல். | ஜூலை 2019 | ஜனவரி 2020 |
| 5. தேவையான சந்தர்ப்பங்களில், நிறுவனத்தின் தலைவரின் வழிகாட்டலுடன், பொது மக்களுக்கு வழிகாட்டுவதற்கும், வசதியளிப்பதற்கும் 'வசதியளித்தல் அதிகாரி' ஒருவரை நியமித்தல். | ஜூலை 2019 | ஜனவரி 2020 |

| **தொடர்பு தகவல்** | | |
|---|---|---|
| நடைமுறைப்படுத்தல் நிறுவனத்தில் பொறுப்பில் உள்ள நபரின் பெயர்: | | பணிப்பாளர் நாயகம்,<br>இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு (CIABOC) |
| பதவி நிலை, திணைக்களம் | | பணிப்பாளர் நாயகம்,<br>இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு (CIABOC) |
| மின்னஞ்சல், தொலைபேசி | | ciaboc@eureka.lk<br>தொ.பே: 011 2 596 365 |
| சம்பந்தப்பட்ட ஏனைய செயற்பாட்டாளர்கள் | சம்பந்தப்பட்ட அரச செயற்பாட்டாளர்கள் | ஜனாதிபதி செயலகம் பொது நிர்வாக முகாமைத்துவ அமைச்சு, உள்நாட்டலுவல்கள் அமைச்சு, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு. |
| | CSO, தனியார் துறை, பல்தரப்பு செயற்குழுக்கள் | டிரான்ஸ்பெரன்சி இன்டர்நெ'னல் ஸ்ரீலங்கா மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட சிவில் சமூகங்கள். |

| | |
|---|---|
| **உறுதிமொழி # 2: சமர்ப்பித்தல், சரிபார்த்தல் மற்றும் பொது அணுகும் வசதியை எளிதாக்குவதற்கு ஒரு வினைத்திறன் மிக்க சொத்து பிரகடன முறைமையை ஸ்தாபித்தல்.** | |
| 1 ஒக்டோபர் 2018 – 30 செப்ரம்பர் 2020 | |
| முன்னணி நடைமுறைப்படுத்தல் நிறுவனம்/செயற்பாட்டாளர் | **இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு (ஊஜயுடீழுஊ)** |
| **உறுதிமொழி விளக்கம்** | |
| உறுதிமொழி அடையாளப்படுத்தப் போகும் பொதுப் பிரச்சினை என்ன? | தெரிவு செய்யப்பட்ட அதிகாரிகளும், சிரே'ட பொது ஊழியர்களும் தமது தனிப்பட்ட நிதி இலாபங்களுக்காக உத்தியோகப்பூர்வ பதவி நிலையை பயன்படுத்துவதாக குடிமக்களிடம் ஒரு கருத்து நிலவுகின்றது. தெரிவு செய்யப்பட்ட அதிகாரிகள் மற்றும் சிரே'ட பொது ஊழியர்களின் நிதி ஆர்வங்கள் குறித்து குடிமக்கள் அறியாதுள்ளனர். அரசாங்க அதிகாரிகள் அல்லது அரசியல்வாதிகளால் உடைமைகள் சட்டவிரோதமான வகையில் கையகப்படுத்தல் தொடர்பில் முறைப்பாடு ஒன்று எழும் போது, தனிப்பட்ட சொத்துக்கள் தொடர்பான விபரங்கள் தேவைப்படும். சொத்துக்களை பிரகடனப்படுத்துவது தொடர்பான நாட்டின் சட்டத்தின் கீழ், வருடாந்தம் தமது சொத்துக்கள் மற்றும் இருப்புக்களை நிறுவனத் தலைவர்களிடம் பிரகடனம் செய்யுமாறு அனைத்து சம்பந்தப்பட்ட அரசாங்க ஊழியர்களும் கோரப்படுகின்றனர். இந்த சட்ட தேவையை பெரும்பாலான அரச நிறுவனங்கள் பின்பற்றுவதில்லை. சொத்து பிரகடனம் என்பது தற்போது காகிதம் மூலமான முறையில் முன்னெடுக்கப்படுகின்றது. ஆனால், சரிபார்த்தல் மற்றும் கண்காணித்தல் செயற்பாடு மிகவும் சவால் மிக்கதாகும். |
| உறுதிமொழி என்ன? | பொது நேர்மையை வலுப்படுத்துவதற்கு உதவும், மற்றும் பொது நிறுவனங்களில் குடிமக்களின் உறுதியை பரவலாக்கும் பொது பதவிநிலைகளை உள்வாங்குவதன் மூலம் முறைசார் சொத்து பிரகடனத்திற்கான ஒரு வினைத்திறன் மிக்க சொத்து பிரகடன முறைமையை உருவாக்குவது சார்ந்ததே உறுதிமொழியாகும். |
| பொது பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உறுதிமொழியானது எவ்வாறு பங்களிக்கும்? | சம்பந்தப்பட்ட சட்ட திருத்தங்களைத் தொடர்ந்து எளிதாக சமர்ப்பிக்கக் கூடிய, சரிபார்க்கக் கூடிய மற்றும் பொது மக்கள் அணுகக் கூடிய வகையில் சொத்து பிரகடனம் தொடர்பான இணைய தளம் ஒன்றினை CIABOC பகிரங்கமாக ஆரம்பிக்கும். இலத்திரனியல், அச்சு மற்றம் எண்ணிம ஊடகங்களைப் பயன்படுத்தி பொது தகவல் பிரசாரம் ஒன்றின் ஊடாக பொது அணுகும் வசதி குறித்த தகவல்கள் குடிமக்களுக்கு வழங்கப்படும். தனிப்பட்ட இலாபங்களுக்காக பொது அலுவலகத்தைப் பயன்படுத்துவதற்கான ஒழுங்கற்ற நடத்தைக்கு எதிரான ஒரு தடையாக சொத்துக்களின் பொது கண்காணிப்பு அமையும். சொத்து பிரகடன சரிபார்த்தல் சார்ந்து முன்னெடுக்கப்பட்ட வழக்கு விசாரணைகளின் நிலைமை குறித்த வருடாந்த அறிக்கைகளை ஊஜயுடீழுஊ வழங்கும். சொத்து தகவல் மற்றும் சரிபார்த்தலுக்கான அணுகும் வசதியை வழங்குவதன் மூலம், ஊழல் சம்பவங்கள் மற்றும் து'பிரயோகம் என்பவற்றை எளிதில் அடையாளங் காணலாம். |
| OGP விழுமியங்களுக்கு ஏன் இந்த உறுதிமொழி சம்பந்தப்படுகின்றது? | பொது அதிகாரிகளின் ஒழுங்கற்ற நடத்தைகளுக்கு எதிரான நடவடிக்கைகளின் பொது கண்காணிப்பினை வழங்குவதன் காரணமாக **பொது பொறுப்புடைமை** யினை இந்த உறுதிமொழி முன்னிறுத்துகின்றது. தகவல் மற்றும் குடிமக்கள் பங்கேற்புக்கான சந்தர்ப்பங்களை வழங்குவதன் மூலம் **பகிரங்கத் தன்மை மற்றும் பொறுப்புடைமைக்கான தொழிநுட்பம் மற்றும் புத்தாக்கம்** என்பவற்றை அது முன்னிறுத்துகின்றது. |
| மேலதிக தகவல்: | இந்த உறுதிமொழியானது தற்போதுள்ள சொத்துக்கள் மற்றும் உடைமைகள் பிரகடன சட்டத்தை வலுப்படுத்துகின்றது ஊழலுக்கு எதிரான ஐக்கிய நாடுகள் சாசனத்தின் குறிக்கோள்களுக்கு ஆதரவளிக்கின்றது. ஊழல் மற்றும் இலஞ்சத்தை குறைக்குமாறு கோரும் நிலைத்திருக்கக் கூடிய அபிவிருத்தி இலக்குகள் 16இன் நடைமுறைப்படுத்தல் மற்றும் தற்போது தயாரிக்கப்பட்டு வரும் ஊழலை எதிர்த்துப் போராடுவதற்கான உத்தேச தேசிய நடவடிக்கைத் திட்டம் ஒன்றின் நடைமுறைப்படுத்தல் உள்ளடங்கலாக CIABOC இன் தற்போதைய நடவடிக்கைகள். |

| சரிபார்க்கக் கூடிய வழங்கக்கூடியவையுடன் மைற்கல் நடவடிக்கை | ஆரம்ப திகதி: | முடிவுத் திகதி: |
|---|---|---|
| 1. சம்பந்தப்பட்ட சட்ட திருத்தங்களைத் தொடர்ந்து சொத்து பிரகடனம் சம்பந்தமான இணையத் தளத்தை பொது மக்கள் முன்னிலையில் அறிமுகப்படுத்தல் | செப்ரம்பர் 2018 | ஜுன் 2019 |
| 2. இலத்திரனியல், அச்சு மற்றும் எண்ணிம ஊடகங்களைப் பயன்படுத்தி பொது மக்கள் தகவல் பிரசாரம் ஒன்றின் ஊடாக பொது அணுகும் வசதி தொடர்பான தகவல்களை குடிமக்களுக்கு வழங்கல். | ஜுலை 2019 | டிசம்பர் 2019 |
| 3. சொத்துக்கள் பிரகடனம் சம்பந்தமான விடயங்களைத் திரட்டி, பகுப்பாய்வு செய்வதற்கும், அவசியமான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் பொறுப்பான "சொத்துக்கள் வெளிப்படுத்தல் அலுவலகம்" ஒன்றை உருவாக்குதல். | ஜுலை 2019 | டிசம்பர் 2019 |
| 4. சொத்து பிரகடன சரிபார்த்தல் சார்ந்து முன்னெடுக்கப்பட்ட வழக்கு விசாரணைகளின் நிலைமை தொடர்பான வருடாந்த அறிக்கைகளை CIABOC வழங்கும். | ஜுலை 2019 | ஜுன் 2020 |

| **தொடர்பு தகவல்கள்** | | |
|---|---|---|
| நடைமுறைப்படுத்தல் நிறுவனத்தில் பொறுப்பில் உள்ள நபரின் பெயர்: | | பணிப்பாளர் நாயகம், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு (CIABOC) |
| பதவி நிலை, திணைக்களம் | | பணிப்பாளர் நாயகம், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு (ஊஐயுடீழுஊ) |
| மின்னஞ்சல், தொலைபேசி | | ciaboc@eureka.lk<br>தொ.பே: 011 2 596 365 |
| சம்பந்தப்பட்ட ஏனைய செயற்பாட்டாளர்கள் | சம்பந்தப்பட்ட அரச செயற்பாட்டாளர்கள் | சனாதிபதி செயலகம், தகவல் தொழில்நுட்ப அமைச்சு, பொது நிர்வாக அமைச்சு, தேசிய இறைவரித் திணைக்களம், இலங்கை நாணயப் பரிவர்த்தனைக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் |
| | CSO, தனியார் துறை, பல்தரப்பு செயற்குழுக்கள் | டிரான்ஸ்பெரன்சி இன்டர்நெசனல் ஸ்ரீலங்கா மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட சிவில் சமூகங்கள். |

| உறுதிமொழி # 3: குடிமக்கள் மத்தியில் தகவல் அறியும் உரிமையை அதிகரித்து, 2020 அளவில் தகவல் அறியும் உரிமை நடைமுறையாக்கத்திற்கு அரச நிறுவனங்களின் எதிர்வினையை மேம்படுத்தல். | |
|---|---|
| 1 ஒக்டோபர் 2018 – 30 செப்ரம்பர் 2020 | |
| முன்னணி நடைமுறைப்படுத்தல் நிறுவனம்/செயற்பாட்டாளர் | தகவலுக்கான உரிமைச் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அமைச்சு |
| **உறுதிமொழி விளக்கம்** | |
| உறுதிமொழி அடையாளப்படுத்தப் போகும் பொதுப் பிரச்சினை என்ன? | தகவலுக்கான அணுகும் வசதி என்பது இலங்கை மக்களின் அரசியலமைப்பு உரிமையாகும். தமக்கு உரித்தான சேவைகள் தொடர்பில் பொது அதிகாரிகளிடமிருந்து தகவலை நாடுவதற்கு மற்றும் முறைப்பாடுகளின் தேர்ச்சியை அறிவதற்கு தகவல் அறியும் உரிமையை பயன்படுத்துவதற்கான,இலஞ்சம் செலுத்துவதற்கான தேவையின்றி தமது குறைகளை நிவர்த்தி செய்வதற்கான, பொது நிறுவனங்களை பொறுப்புடையதாக்குவதற்கான ஆற்றல் குடிமக்களுக்கு உள்ளது. எவ்வாறாயினும், வரையறுக்கப்பட்ட விழிப்புணர்வின் காரணமாக, தகவல் அறியும் உரிமையை பயன்படுத்தும் குடிமக்களின் எண்ணிக்கை குறைவாகவே இருக்கின்றது. முறையான மற்றும் அணுகக் கூடிய விதத்தில் அறிக்கைகள் பேணப்படவில்லை என்பதே பொது மக்கள் விழிப்புணர்வின்மைக்கு வழிகோலும் விடயமாக உள்ளது.தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தகவல்களின் குறிப்பிட்ட வகைகளை செயற்றிறன் மிக்க வகையில் வெளியிடுவது அத்தியாவசியமாகும். ஆனால், சட்டத்தின் மிகவும் மோசமான நடைமுறைப்படுத்தப்பட்ட ஏற்பாடுகளில் ஒன்றாகவும் அது காணப்படுகின்றது. |
| உறுதிமொழி என்ன? | தகவல் அறியும் உரிமையின் கீழ் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க குடிமக்களின் சந்தர்ப்பங்களை பரவலாக்குவதும், அத்தகைய விண்ணப்பங்களுக்கு பொது அதிகாரிகளின் பதிலளிக்கும் தன்மையை மேம்படுத்துவதும், அதன் மூலம் சேவை விநியோகத்தை மேம்படுத்தல், ஊழலை வெளிப்படுத்தல் மற்றும் தீர்மானம் எடுத்தலில் பங்குபற்றலை ஊக்குவித்தல் என்பவற்றை நோக்கி பங்களிப்பதும் இந்த உறுதிமொழியின் நோக்கமாகும். |
| பொது பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உறுதிமொழியானது எவ்வாறு பங்களிக்கும்? | 50 வீதமான பொது அதிகார சபைகளை பட்டியலிட்டு, மாற்றுத்திறனுடையவர்களும் அணுகக் கூடிய தகவல் அறியும் உரிமை கோரிக்கை தளம் ஒன்றினை அமைச்சு தயாரிக்கும். அத்தகைய இணைய தளம் ஒன்று அரசாங்கத்தினால் நடத்தப்படுகின்ற நிலையில்,பெரும்பாலான பொது அதிகார சபைகள் பட்டியலிடப்பட்டுள்ள நிலையில்,மாற்றுத்திறனாளிகள் உள்ளடங்கலாக, குடிமக்களின் அணுகும் தன்மையை அது அதிகரிக்கும். 50 வீதமான பொது அதிகார சபைகளில் இணைய பதிவு முகாமைத்துவ முறைமைகள் அறிமுகப்படுத்தப்படும். இணைய பதிவு முகாமைத்துவத்திற்கு கிடைக்கக் கூடியதாகவுள்ள தகவல்களை எண்ணிமப்படுத்தப்படல் வேண்டும். அது மக்களுக்கு பெரும் அணுகும் வசதியை ஏற்படுத்திக் கொடுக்கும்.தகவல் அறியும் உரிமையை பயன்படுத்தும் மக்களின் அளவினை அதிகரிக்கும் மற்றும் செயற்றிறன் மிக்க வகையிலும், தகவல் அறியும் உரிமைக்கான பதிலாக பொது அதிகார சபைகளின் பதில் வழங்குதலை அதிகரிக்கும் நோக்குடன் விரைவுபடுத்தப்பட்ட விழிப்புணர்வு ஏற்படுத்தல் நிகழ்ச்சி முன்னெடுக்கப்படும்.ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவிலும் மக்களுக்கான விழிப்புணர்வு-அதிகரித்தல் நிகழ்ச்சியை அமைச்சு முன்னெடுக்கும். அத்தகைய நிகழ்ச்சிகளின் விளைவாக, முந்தைய வருடங்களில் ஒப்பிடப்பட்ட பகுதிகளில் பதிவு செய்யப்பட்ட தகவல் அறியும் உரிமை விண்ணப்பங்களை அதிகரிக்க அமைச்சு எதிர்பார்க்கின்றது.தகவல் அறியும் உரிமை தளத்தில் கட்டாய செயற்றிறன் மிக்க வெளிப்படுத்தல் ஏற்பாடுகளுடன் இணைந்ததாக 15 பொது அதிகார சபைகளுடன் அமைச்சு பணியாற்றுகின்றது. |
| OGP விழுமியங்களுக்கு ஏன் இந்த உறுதிமொழி சம்பந்தப்படுகின்றது? | தற்போதைய தகவல் அறியும் உரிமை சட்டத்தின் ஏற்பாடுகளை வலுப்படுத்தும் என்பதால் **தகவலுக்கான அணுகும் வசதி**யின் பெறுமதியை இந்த உறுதிமொழி அடையாளப்படுத்துகின்றது. வெறும் பார்வையாளர் என்பதிலிருந்து, ஆட்சிமுறையின் செயற்றிறன் மிக்க பங்குபற்றுனர்களாக மாறுவதாக குடிமக்களின் வகிபாகத்தை மாற்றுவதால் **பொதுமக்கள் பங்குபற்றலை** அது பரவலாக்குகின்றது.பொது அதிகார சபைகள் எதிர்பார்த்த முடிவுகளை வழங்குகின்றனவா என குடிமக்கள் மதிப்பீடு செய்யவும், தீர்மானிக்கவும் |

| | |
|---|---|
| | முடியும் என்பதால் **பொதுமக்கள் பொறுப்புடைமையையும்** அது முன்னிறுத்துகின்றது. |
| மேலதிக தகவல்: | 2016ம் ஆண்டு 12ம் இலக்க தகவல் அறியும் சட்டத்தின் செயற்பாட்டினை இந்த உறுதிமொழி வலுப்படுத்தும். நிலைத்திருக்கக் கூடிய அபிவிருத்தி இலக்கு இல. 16உடன் இசைந்ததாக அது இருக்கும். அத்துடன், உத்தேச தேசிய ஊழலுக்கு எதிரான மூலோபாயங்களுக்கு இசைவானதாகவும் இருக்கும். |

| சரிபார்க்கக் கூடிய வழங்கக்கூடியவையுடன் மைற்கல் நடவடிக்கை | ஆரம்ப திகதி: | முடிவுத் திகதி: |
|---|---|---|
| 1. ஆரம்பத்தில் பட்டியலிடப்பட்ட 10 பொது நிறுவனங்களுடன், தகவல் மற்றும் தொலைத்தொடர்புகள் தொழிநுட்ப நிறுவனம் / ஏனைய ஒப்பந்த நிறுவனங்கள், மற்றும் பட்டியலிடப்பட்ட 50 வீதமான அனைத்து பொது அதிகார சபைகளின் ஆதரவுடன், தேசிய நடவடிக்கைத் திட்ட காலத்தின் இறுதியில் அணுகக் கூடிய வகையில் திட்டமிடல் அமைச்சினால் மாற்றுத்திறனாளிகளும் பயன்படுத்த இலகுவான தகவல் அறியும் உரிமை கோரிக்கை தளம் ஒன்று உருவாக்கப்படும். தளத்தை அறிமுகப்படுத்துவதற்கு முன்னர் பயனர் மற்றும் மாற்றுத்திறனுக்கு இணக்கமான அளவினை அறிவதற்கு அமைச்சு பரிசோதனை ஒன்றை முன்னெடுக்கும். தளம் தொடர்பில் பால்நிலைசார் தரவினையும் தளம் பின்தொடரும். | ஒக்டோபர் 2018 | ஜுன் 2019 |
| 2. இணைய பதிவு முகாமைத்துவ முறையானது 10 பொது அதிகார சபைகளுக்கு விருத்தி செய்யப்பட்டு, அறிமுகப்படுத்தப்படும். தேசிய நடவடிக்கைத் திட்ட காலத்தின் இறுதியில் அனைத்து பொது அதிகார சபைகளிலும் 50 வீதமாக பொது அதிகார சபைகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும். | நவம்பர் 2018 | ஆகஸ்ட் 2020 |
| 3. தகவல் அறியும் உரிமை ஆணைக்குழவின் வருடாந்த அறிக்கைக்கு அமைய 30 ஆகஸ்ட் 2019 அன்று,முந்தைய வருடத்தில் முன்வைக்கப்பட்ட தகவல் அறியும் உரிமை கோரிக்கையில் மற்றும் வழங்கப்பட்ட தகவல்களில் 50 வீத அதிகரிப்பு இருக்கும். 30 ஆகஸ்ட் 2020 அளவில் 2019 அடிமட்டத்தில் 75 வீத அதிகரிப்பு இருக்கும். வெகுசன ஊடக அமைச்சினால் பொது அணுகும் வசதிக்கான சாரம்ச தரவுத் தாள் கிடைக்கக் கூடியதாகவிருக்கும். | நவம்பர் 2018 | ஆகஸ்ட் 2020 |
| 4. குடிமக்கள் மற்றும் சம்பந்தப்பட்ட சிவில் சமூக நிறுவனங்களுடனான கலந்தாய்வில் வெகுசன ஊடக அமைச்சானது,ஒவ்வொரு தேசிய நடவடிக்கைத் திட்ட வருடத்திலும் 5 தெரிவு செய்யப்பட்ட பிரதேச செயலகங்கள், 5 மாவட்டச் செயலகங்கள் மற்றும் 5 அமைச்சுக்களை வழிநடத்தும். அத்துடன், தமது சம்பந்தப்பட்ட இணையத் தளங்களிலும், அலுவலக வளாகங்களிலும் மாதாந்த அடிப்படையில் வர்த்தமானி இல. 66/2004 இன் விதிமுறை 20இற்கு அமைய முனைப்பான தகவல்களை கிடைக்கக் கூடியதாக செய்யும். ஒவ்வொரு வருடமும் இந்த பொது அதிகார சபைகளின் பெயர்கள் பகிரங்கப்படுத்தப்படும். | நவம்பர் 2018 | ஆகஸ்ட் 2020 |

| **தொடர்புத் தகவல்** | | |
|---|---|---|
| நடைமுறைப்படுத்தல் நிறுவனத்தில் பொறுப்பில் உள்ள நபரின் பெயர்: | | ஆள திலக்கா ஜயசுந்தர |
| பதவி நிலை, திணைக்களம் | | மேலதிக செயலாளர், நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு |
| மின்னஞ்சல், தொலைபேசி | | தொலை: 0112513459 0112513460<br>கைத்தொலைபேசி:0766632368 |
| சம்பந்தப்பட்ட ஏனைய செயற்பாட்டாளர்கள் | சம்பந்தப்பட்ட அரச செயற்பாட்டாளர்கள் | பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு, உள்நாட்டலுவல் அமைச்சு, தகவல் தொழில்நுட்ப அமைச்சு தகவல் அறியும் உரிமை குறித்த ஆணைக்குழு, தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவரகம் (ICTA) |
| | CSO, தனியார் துறை, பல்தரப்பு செயற்குழுக்கள் | TISL மற்றும் ஏனைய ஈடுபட்டுள்ள CSO க்கள் |

| உறுதிமொழி #4: சுகாதார துறை அபிவிருத்தியில் குடிமக்கள் பங்குபற்றலுக்கான நிலையான பொறியமைப்பு ஒன்றை ஸ்தாபித்தல். | | | |
|---|---|---|---|
| 1 ஒக்டோபர் 2018 – 30 செப்ரம்பர் 2020 | | | |
| முன்னணி நடைமுறைப்படுத்தல் நிறுவனம்/செயற்பாட்டாளர் | **சுகாதார அமைச்சு** | | |
| **உறுதிமொழி விளக்கம்** | | | |
| உறுதிமொழி அடையாளப்படுத்தப் போகும் பொதுப் பிரச்சினை என்ன? | முதன்மை சுகாதார பராமரிப்பினை வலுப்படுத்துவதற்கான திருத்தங்களை சுகாதார துறை தற்போது முன்னெடுத்துள்ளது. சுகாதார பராமரிப்புக்கான தேவைகளை அடையாளப்படுத்துவதனை இந்த திருத்தங்கள் இலக்காகக் கொண்டுள்ளன. அத்துடன், குடிமக்கள் நெருக்கமான முதன்மை சுகாதார பராமரிப்பு வைத்தியசாலையை அணுகுவதற்கான முறைமை ஒன்றை வடிவமைக்கும். அத்துடன், தமது தேவைகளுக்கு அமைய பொருத்தமான விசேட பராமரிப்பினையும் பெறும். இந்த திருத்தங்களை காண்பதற்கு இந்த செயற்பாட்டில் குடிமக்கள் பங்குபற்ற வேண்டியது அவசியம் என்ற போதிலும்,சுகாதார துறை அபிவிருத்தியில் தற்போது வரையறுக்கப்பட்ட ஈடுபாடே உள்ளது. தகவல்களை பகிர்வதற்கு மற்றும் குடிமக்கள் பின்னூட்டத்தைப் பெறுவதற்கு நிலையான பொறியமைப்பின்மை என்பதே சுகாதார துறை அபிவிருத்தியில் குடிமக்களின் குறைந்தளவு பங்குபற்றலுக்கான முதன்மை காரணமாகும். | | |
| உறுதிமொழி என்ன? | தமது வெற்றியை உறுதி செய்வதற்கு சுகாதாரத் துறை திருத்தங்களை குடிமக்கள் புரிந்துகொள்ளவும், பங்குபற்றவும் வேண்டும். குடிமக்களை வலுப்படுத்தும் மூலோபாயங்களை வழங்குவதும், நாட்டின் சுகாதார சேவைகள் அபிவிருத்தியில் பங்குபற்றச் செய்வதுமே இந்த உறுதிமொழியின் நோக்கமாகும். இதனை வசதியளிப்பதற்கு,பொது மக்களை ஈடுபடுத்தும் தற்போதுள்ள வலையமைப்புக்கள் மீள விஜயம் செய்யப்படல் வேண்டும். குடிமக்களின் பங்குபற்றலை முறைசார்ந்ததாக்குவதற்கான தொடர்புகளும், தகவல்களை பகிர்வதற்கான தளங்களும் வலுப்படுத்தப்படல் வேண்டும். | | |
| பொது பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உறுதிமொழியானது எவ்வாறு பங்களிக்கும்? | பல்வேறு மூலோபாயங்களைப் பயன்படுத்தி சுகாதார துறை அபிவிருத்தியில் பங்குபற்றுவதற்கு குடிமக்கள் வலுப்படுத்தப்படுவர். குடிமக்கள் பங்குபற்றலை முறைசார்ந்ததாக்குவதற்கு குடிமக்கள் குழுக்களுடன் மேலதிக தொடர்புகள் ஏற்படுத்தப்படும். மக்களுக்கு சினேகப்பூர்வமானதாக்குவதற்கு சுகாதார அமைச்சின் இணையத்தளத்தை மேம்படுத்துவது என்பது தகவல்களை எளிதாக அணுகுவதற்கும், பின்னூட்டம் வழங்குவதற்கு குடிமக்களுக்கான மேலதிக சந்தர்ப்பங்களை உருவாக்கும். எளிதில் புரிந்துகொள்ளக் கூடிய சுகாதார தகவல்கள் அடிப்படையிலான ஆதாரங்களையும் இந்த தளம் வழங்கும். மக்களின் சுகாதாரத்திற்கு தடையாக இருக்கக் கூடிய எந்தவொரு தப்பெண்ணங்களையும் இது இல்லாது செய்வதுடன், சுகாதாரம் தொடர்பான மக்களின் அறிவையும் மேம்படுத்தும். நீடித்த சிறுநீரக நோய், மன நலம் மற்றும் மருந்து விநியோக முகாமைத்துவம் என்பன அடையாளங் காணப்பட்டுள்ள முன்னுரிமைப் பகுதிகளாகும். பயனுள்ள பின்னூட்டங்களை வழங்குவதுடன், தமது சுகாதார பழக்க வழக்கங்களை மாற்றுவதற்கும் மக்கள் வலுப்படுத்தப்படலாம். எ.கா. முதன்மை பராமரிப்பினை வலுப்படுத்தல் என்பது, பராமரிப்புக்காக தொடர்பு கொள்ளும் முதலாவது தெரிவு இடமாக முதன்மை பராமரிக்கு வைத்தியசாலை கட்டமைப்பாக உள்ளது. | | |
| OGP விழுமியங்களுக்கு ஏன் இந்த உறுதிமொழி சம்பந்தப்படுகின்றது? | வெற்றிகரமான வகையில் சுகாதார திருத்தங்கள் நடைமுறைப்படுத்துவதில் குடிமக்களின் பங்குபற்றலை ஊக்குவிப்பதால் **பொது மக்கள் பங்குபற்றலின்** பெறுமதியை இந்த உறுதிமொழி அடையாளப்படுத்துகின்றது. குடிமக்களுக்கு மேலும் அணுகக் கூடிய விதத்தில் சுகாதாரம் சார் தகவல்களை வழங்குவதில் **தகவலுக்கான அணுகும் வசதி**யை அது முன்னிறுத்துகின்றது. | | |
| மேலதிக தகவல்: | UHC இற்கான சுகாதார சேவை விநியோகத்திற்கான கொள்கையாக திருத்தங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. | | |
| சரிபார்க்கக் கூடிய வழங்கக்கூடியவையுடன் மைற்கல் நடவடிக்கை | | ஆரம்ப திகதி: | முடிவுத் திகதி: |

| | | |
|---|---|---|
| 1. சர்வோதயா மற்றும் மக்கள் சுகாதார முன்னெடுப்பு போன்ற தற்போதுள்ள வலையமைப்புக்களை முறைசார்ந்ததாக்குவதன் ஊடாக சுகாதார மேம்பாட்டிற்கான குடிமக்கள் பங்குபற்றலை ஏதுவாக்குவதற்கு நிலையான பொறியமைப்பு அறிமுகப்படுத்தப்படும். | ஒக்டோபர் 2018 | ஆகஸ்ட் 2019 |
| 2. மக்களுக்கும், தொழில்சார்ந்தவர்களுக்கும் சினேகமான அமைச்சு தளம் உருவாக்கப்பட்டு, சுகாதார அபிவிருத்தியில் நிறுவனத்தின் உருவத்தினை மேம்படுத்தும். அதேவேளை, அனைவரையும் சுகாதார மேம்படுத்தலுக்காக ஈடுபடுத்தும். | ஒக்டோபர் 2018 | டிசம்பர் 2019 |
| 3. முதன்மை பராமரிப்பு மட்டம் வரையில் மருந்து விநியோக முகாமைத்துவ தகவல் முறைமையானது, வழங்குனர்கள் மற்றும் மக்கள் என இருதரப்பினருக்கும் சேமிப்புக்களை வழங்கல் மூலம் தயாரிக்கப்படுதல். | ஒக்டோபர் 2018 | டிசம்பர் 2019 |
| 4. நீடித்த சிறுநீரக நோய் சம்பந்தப்பட்ட உணவுசார் ஆய்வு தொடர்பான தகவலானது ஒழுங்கமைக்கப்பட்ட தொடர்பாடல் உபாயம் ஒன்றின் ஊடாக குடிமக்களுக்கு கிடைக்கச் செய்யப்படும். | ஒக்டோபர் 2018 | ஆகஸ்ட் 2019 |
| 5. பாடசாலைகள் மற்றும் ஏனைய சமூக நிறுவனங்களில் ஆதாரம்சார் மனநல மேம்படுத்தல் தொடர்பாடல் பிரசாரம் ஆரம்பிக்கப்படும். | ஜனவரி 2019 | டிசம்பர் 2019 |

| | | |
|---|---|---|
| **தொடர்புத் தகவல்** | | |
| நடைமுறைப்படுத்தல் நிறுவனத்தில் பொறுப்பில் உள்ள நபரின் பெயர்: | | **Dr.திருமதி H.S.R பெரேரா** |
| பதவி நிலை, திணைக்களம் | | பணிப்பாளர், susiepds@gmail.com<br>கைத்தொலைபேசி: 0777588944 |
| மின்னஞ்சல், தொலைபேசி | | |
| சம்பந்தப்பட்ட ஏனைய செயற்பாட்டாளர்கள் | சம்பந்தப்பட்ட அரச செயற்பாட்டாளர்கள் | சுகாதாரத் திணைக்களம் |
| | CSO, தனியார் துறை, பல்தரப்பு செயற்குழுக்கள் | *சர்வோதயா, மக்கள் சுகாதார முன்னெடுப்பு* |

| உறுதிமொழி # 5: 2020 அளவில் போதைப்பொருட்கள், புகையிலை, மது மற்றும் ஏனையவற்றிற்கு 'இல்லை' என்று சொல்வதற்கு பாடசாலை மாணவர்களின் நடத்தையை மாற்றல். | |
|---|---|
| 1 ஒக்டோபர் 2018 – 30 செப்ரம்பர் 2020 | |
| முன்னணி நடைமுறைப்படுத்தல் நிறுவனம்/செயற்பாட்டாளர் | **சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சு, கல்வி அமைச்சு** |
| **உறுதிமொழி விளக்கம்** | |
| உறுதிமொழி அடையாளப்படுத்தப் போகும் பொதுப் பிரச்சினை என்ன? | ஒரு தசாப்தத்திற்கும் மேலாக நகரம் மற்றும் கிராமப் புறங்கள் இரண்டிலும் பாடசாலை மாணவர்களினால் போதைப் பொருள், மது மற்றும் புகையிலை பயன்பாடு என்பது ஒரு முக்கிய கரிசனையாக இருக்கின்றது. அத்தகைய பயன்பாடு நீண்ட காலம் அடிமையாகுதலுக்கு வழிநடத்தக் கூடிய கூருணர்வு மிக்க வயதாக இருக்கின்றது. போதைப்பொருள், மது மற்றும் புகையிலை பயன்பாட்டுக்கு சிறுவர்கள் பலவீனமடைவதற்கான பிரதான காரணங்களாக, சக மாணவர்களின் அழுத்தம் அல்லது போதிய அறிவின்மை அல்லது தமது மோசமான சூழ்நிலைகள் பற்றிய வழிகாட்டல் என்பன உள்ளன. போதைப் பொருள் பாவனையில் ஈடுபட்டுள்ள பெரும்பாலான சிறுவர்கள், பாடசாலையை விட்டு இடைவிலகியுள்ளனர். போதைப் பொருள் பயன்பாட்டு நடத்தைகளுடன் சிறுவர்களை பாதிக்கும் மோசமான சமூக மற்றும் சுகாதார விடயங்களும் உள்ளன. |
| உறுதிமொழி என்ன? | ஜனாதிபதி செயலகத்தின் ஒத்துழைப்புடன் சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சும், கல்வி அமைச்சும் இணைந்து 6,400 இரண்டாம் நிலைக் கல்வி பாடசாலைகளில் பாடசாலை போதைப் பொருள் கட்டுப்பாட்டு குழுக்களை உருவாக்கி, வலுப்படுத்தும்.பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் ஆசியர்களை உள்ளடக்கிய பாடசாலை போதைப் பொருள் கட்டுப்பாட்டு குழுக்கள், போதைப் பொருள் தடுப்பு நடவடிக்கைகளுக்கான ஒரு வினைத்திறன் மிக்க தீர்மானம் எடுத்தல் அங்கமாக இருக்கும். சிறுவர்களினால் போதைப் பொருட்களின் பயன்பாட்டினை இல்லாது செய்வதற்கான ஏனைய மூலோபாயங்களும் கிராம குழுக்கள் மற்றும் மத நிறுவனங்களின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும். பாடசாலை போதைப் பொருள் கட்டுப்பாட்டு நிகழ்ச்சியை கண்காணிப்பதற்கு முறையான பொறியமைப்பு ஒன்று அமைக்கப்படும். பாடசாலை போதைப் பொருள் கட்டுப்பாடு நிகழ்ச்சியை மீளாய்வு செய்வதற்கும், சிறந்த பயிற்சிகளை பகிர்வதற்கும் வருடாந்த அமர்வு நடத்தப்படும். |
| பொது பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உறுதிமொழியானது எவ்வாறு பங்களிக்கும்? | போதைப் பொருள் கட்டுப்பாட்டுச் செயற்பாடுகளில் வினைத்திறன் மிக்க பங்குபற்றுனர்களாக பாடசாலை மாணவர்களை ஈடுபடுத்துவதற்கான ஆக்கப்பூர்வமான மூலோபாயங்களை இந்த உறுதிமொழி பயன்படுத்தும். துகவலறிந்த தீர்மானத்தை எடுப்பதற்கும், எந்தவொரு போதைப் பொருள் பயன்பாட்டினையும் மாற்றுவதற்கு சுய-ஊக்கம் கொண்டவர்களாக அவர்கள் வலுப்படுத்தப்படுவர்.தமது கிராமங்களில் போதைப் பொருள் அற்ற சூழலை உருவாக்குவதனை நோக்கி கிராம குழுக்களில் சமுதாயங்களின் பங்குபற்றல் பணியாற்றும். போதைப் பொருளின் ஆபத்துக்கள் மற்றும் அபாயங்கள் குறித்த முறையான புரிந்துணர்வுடன், போதைப் பொருள் தடுப்பிற்கு ஆதரவளிக்கக் கூடிய பௌதீக சூழல் ஒன்றில், சிறுவர்கள் போதைப் பொருள் பழக்கத்திற்கு அடிமையாகும் சாத்தியம் குறைக்கப்படும். |
| OGP விழுமியங்களுக்கு ஏன் இந்த உறுதிமொழி சம்பந்தப்படுகின்றது? | போதைப் பொருள் தடுப்புக்கான மூலோபாயங்களை நடைமுறைப்படுத்தல் மற்றும் கண்காணிப்பதில் ஈடுபட்டுள்ள பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் சமுதாயங்கள் உள்ளடங்கலாக குடிமக்கள் என்ற வகையில் **பொது மக்கள் பங்குபற்றல்** மற்றும் **வெளிப்படைத்தன்மையை** இந்த உறுதிமொழி முன்னிறுத்தும். |
| மேலதிக தகவல்: | உறுதிமொழி ஜனாதிபதி செயலகத்தினால் மேற்கொள்ளப்படும் போதைப்பொருள் தடுப்புக்கான தேசிய நிகழ்ச்சித்திட்டத்தையும் சிறுவர் பாதுகாப்புக்கான கொள்கை மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களையும் வலுப்படுத்தும். |

| சரிபார்க்கக் கூடிய வழங்கக்கூடியவையுடன் மைற்கல் நடவடிக்கை | ஆரம்ப திகதி: | முடிவுத் திகதி: |
|---|---|---|
| 1. பாடசாலை மாணவர்கள் மத்தியில் போதைப் பொருள் பயன்பாட்டினை இல்லாது செய்வதற்கான மூலோபாயங்களை | செப்ரம்பர் 2018 | டிசம்பர் 2018 |

| | | |
|---|---|---|
| நடைமுறைப்படுத்துவதற்கு 6400 இரண்டாம் நிலைக் கல்வி பாடசாலைகளில் பாடசாலை போதைப் பொருள் கட்டுப்பாட்டு குழுக்கள் உருவாக்கப்பட்டு, வலுப்படுத்தப்படும். | | |
| 2. பாடசாலை வளாகங்களுக்கு வெளியே சிறுவர்களால் போதைப் பொருள் பயன்பாட்டினை இல்லாது செய்வதற்கு கிராம குழுக்களின் ஊடாக மூலோபாயங்கள் நடைமுறைப்படுத்தப்படும். | நவம்பர் 2018 | பெப்ரவரி 2019 |
| 3. சிறுவர்களுக்கான போதைப் பொருள் தடுப்பு நடவடிக்கைகள் மதத் தலைவர்கள் மற்றும் மதத் தலங்களின் இடையீட்டின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும். | மார்ச் 2019 | மே 2019 |
| 4. பாடசாலை போதைப் பொருள் கட்டுப்பாட்டு நிகழ்ச்சி கண்காணிக்கப்படும். | செப்ரம்பர் 2018 | ஒக்டோபர் 2020 |
| 5. பாடசாலை போதைப் பொருள் கட்டுப்பாட்டு நிகழ்ச்சியை மீளாய்வு செய்வதற்கும், சிறந்த பயிற்சிகளை பகிரவும் வருடாந்த மாநாடு நடைபெறும். | செப்ரம்பர் 2019 | செப்ரம்பர் 2020 |

| | | |
|---|---|---|
| **தொடர்புத் தகவல்** | | |
| நடைமுறைப்படுத்தல் நிறுவனத்தில் பொறுப்பில் உள்ள நபரின் பெயர்: | | Mr J P S Jayasinghe (Director- Planing), Ministry of Women & Child Affairs<br>email – jpsjayasinghe@gmail.com<br>011 2186275<br>0718102952<br>Mr H M Abeyratne (Chairman, National Child protection Authority)<br>email – chairperson@childprotection.gov.lk<br>0112778911/ 0112778915 |
| பதவி நிலை, திணைக்களம் | | |
| மின்னஞ்சல், தொலைபேசி | | |
| சம்பந்தப்பட்ட ஏனைய செயற்பாட்டாளர்கள் | சம்பந்தப்பட்ட அரச செயற்பாட்டாளர்கள் | *ஜனாதிபதி செயலகம், தேசிய அபாயகரமான போதைப் பொருள் கட்டுப்பாட்டுச் சபை, புகையிலை மற்றும் மது தொடர்பான தேசிய அதிகார சபை, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை* |
| | CSO, தனியார் துறை, பல்தரப்பு செயற்குழுக்கள் | *மது மற்றும் போதைப் பொருட்கள் தகவல் நிலையம் புதிது புனைதல் சமூக அபிவிருத்தி மன்றம் 'ஹெல்தி லங்கா' சர்வோதயா மற்றும் விடயம் தொடர்பில் பணியாற்றும் ஏனைய CBO கள்.* |

| உறுதிமொழி # 6: GIC-1919,அரசாங்க இணையத்தளங்கள் மற்றும் திறந்த தரவு எண்ணிம தளங்களினை மேம்படுத்துவதன் மூலம் செலவு குறைந்த மற்றும் நம்பகமான அரசாங்க தகவல் சேவைகளை வழங்கல். | |
|---|---|
| 1 ஒக்டோபர் 2018 – 30 செப்ரம்பர் 2020 | |
| முன்னணி நடைமுறைப்படுத்தல் நிறுவனம்/செயற்பாட்டாளர் | தகவல் தொழில்நுட்ப டிஜிட்டல் உட்கட்டமைப்பு என்ற விடயத்துக்கு பொறுப்பான அமைச்சு |
| **உறுதிமொழி விளக்கம்** | |
| உறுதிமொழி அடையாளப்படுத்தப் போகும் பொதுப் பிரச்சினை என்ன? | பல்வேறு அரசாங்க நிறுவனங்களினால் வழங்கப்படும் குடிமக்கள் சேவைகள் தொடர்பான நம்பகமான தகவல்களுக்கு உடனடியான அணுகும் வசதி குடிமக்களுக்கு இல்லை. இந்த சேவைகள் பற்றிய நேர்த்தியான மற்றும் சம்பந்தப்பட்ட தகவல்களையும், ஏனைய அரசாங்க தகவல்களையும் பெறுவது பெரும்பாலான குடிமக்களுக்கு சிக்கலானதாக இருக்கின்றது. குடிமக்களின் உரிமைகள் தொடர்பான மோசமான அறிவு மற்றும் ஆட்சிச் செயற்பாட்டில் குடிமக்களின் ஈடுபாட்டில் பற்றாக்குறைக்கு இது காரணமாகின்றது. |
| உறுதிமொழி என்ன? | சிறந்த சேவை வழங்கலை பெறுவதற்கும், சிறந்த அரசாங்க தீர்மானம் எடுத்தலில் செல்வாக்கு செலுத்துவதற்கும் தேவையான தகவல்களை அடையாளப்படுத்துவதற்கு அரசாங்க தகவல் நிலைய (GIC - 1919) அறிவு தளங்களினை பரவலாக்கல் மற்றும் மேம்படுத்தல் சம்பந்தப்பட்டதாக இந்த உறுதிமொழி உள்ளது. அரசாங்க சேவைகள் தொடர்பான தகவல்களை அணுகுவதற்கு மாற்றுத்திறனாளிகள் உள்ளடங்கலாகுடிமக்களுக்கு இணக்கமான வகையில் அரசாங்க சேவைகளின் பரந்தளவு குறித்து தகவல்கள் வழங்கப்படும். |
| பொது பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உறுதிமொழியானது எவ்வாறு பங்களிக்கும்? | சம்பந்தப்பட்ட உள்ளடக்கத் தகவல்களுடன் அரசாங்க தகவல் நிலைய அறிவுத் தளங்களிற்கு மேலதிகமாக 80 அரசாங்க நிறுவனங்களை உள்ளடக்கல் என்பது, குடிமக்கள் சேவையின் மற்றும் அரசாங்கத்தின் தகவல் வழங்கல் பொறியமைப்பின் வினைத்திறனை அதிகரிக்கும். அதன் தொடர்ச்சியாக,எந்தவொரு அளவுசார் மற்றும் பண்புசார் குறைபாடுகளை சரி செய்வதற்கு அனைத்து அரசாங்க தளங்கள் மற்றும் இணைய சேவைகளின் வினைத்திறனானது பருவகால அடிப்படையில் தரப்படுத்தப்படும். மாற்றுத்திறனுடைய குடிமக்கள் தகவல்களை உடனடியாக அணுகக் கூடியதனை உறுதி செய்வதற்கு புதிய அம்சங்கள் அறிமுகப்படுத்தப்படும். அரசாங்க தகவல் நிலைய சேவைகள் தொடர்பான குடிமக்களின் விழிப்புணர்வானது பரவலாக்கப்பட்டு,ஆறு மாதங்களுக்கு ஒரு முறை அவர்களது விழிப்புணர்வு மதிப்பீடு செய்யப்படும். அத்தகைய அறிக்கைகள் பகிரங்கப்படுத்தப்படும். அரசாங்கத்தின் தரவுத் தொகுதிகள் 300இலிருந்து 2,000ஆக அதிகரிக்கப்பட்டு, குடிமக்களின் அணுகும் வசதிக்கு கிடைக்கக் கூடியதாக செய்யப்படும். திறந்த அரசாங்க தரவுத்தொகுதிகளை அதிகரிப்பதன் மூலம், குடிமக்களால் பொது தரவுத் தொகுதிகளை இலகுவில் கண்டறியக் கூடியதாகவும், அணுகக் கூடியதாகவும், மீளப் பயன்படுத்தக் கூடியதாகவும், அரசாங்கத்தின் தீர்மானம் எடுத்தலில் ஈடுபடக் கூடியதாகவும் இருக்கும். புது வகையான டிஜிட்டல் செயலிகள் மற்றும் சேவைகளை குடிமக்கள் விருத்திச் செய்வதற்கு ஏதுவாக்குவதன் மூலம் தொழிநுட்ப புத்தாக்கம் மற்றும் பொருளாதார வளர்ச்சியையும் திறந்த தரவுகளுக்கான அணுகும் வசதி முன்னிறுத்தும்.அரசாங்க இணையத்தளங்கள் மற்றும் இணைய சேவைகளின் வினைத்திறன் மதிப்பீடு செய்யப்பட்டு, அரசாங்கத்தின் இணைய இருப்பு குறித்து வருடத்திற்கு இரு முறை அறிக்கைகள்சமர்ப்பிக்கப்படும். |
| OGP விழுமியங்களுக்கு ஏன் இந்த உறுதிமொழி சம்பந்தப்படுகின்றது? | செலவு குறைந்த மற்றும் நம்பகமான தகவல்களுக்கான குடிமக்களின் அணுகும் வசதியை இந்த உறுதிமொழி பரவலாக்குகின்றது. அரசாங்கத்தின் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் சேவைகளை பெறுவதற்கு ஏதுவாக்குவதன் மூலம் **வெளிப்படைத் தன்மையை** முன்னிறுத்துகின்றது.அரசாங்க தரவுகளை பரிசோதிப்பதற்கு மற்றும் தீர்மானம் எடுத்தல் செயற்பாட்டில் ஈடுபடுவதற்கு குடிமக்களுக்கான சந்தர்ப்பங்களை வழங்குவதன் மூலம் **பொது பங்குபற்றலை** அது முன்னிறுத்துகின்றது. புதிய தொழிநுட்பங்களைப் பயன்படுத்தி தகவல் பரிமாறல் மற்றும் அணுகும் |

| | |
|---|---|
| | வசதிக்கான சந்தர்ப்பங்களை அது உருவாக்குவதால் **தொழிநுட்பம் மற்றும் புத்தாக்கத்தினையும்** இந்த உறுதிமொழி முன்னிறுத்துகின்றது. |
| மேலதிக தகவல்: | பொது சேவைகளின் அடைவு மற்றும் எதிர்வினையை மேம்படுத்துவதற்கு ICTஇனை பயன்படுத்துவதற்கான அரசாங்கத்தின் தகவல் மற்றும் தொலைத்தொடர்புகள் தொழிநுட்ப நிறுவனத்தின் நிகழ்ச்சிகள் மற்றும் கொள்கைகளுக்கு இந்த உறுதிமொழி ஆதரவளிக்கின்றது.*நிலைபேறான இலங்கை: தொலைநோக்கு மற்றும் மூலோபாய வழி* மற்றும் *தொலைநோக்கு 2025 வரைபுநகலில்* பரிந்துரைகள் மற்றும் உறுதிமொழிகள். |

| சரிபார்க்கக் கூடிய வழங்கக்கூடியவையுடன் மைற்கல் நடவடிக்கை | ஆரம்ப திகதி: | முடிவுத் திகதி: |
|---|---|---|
| 1. மேலதிகமாக 80 அரசாங்க நிறுவனங்களின் அரசாங்க சேவைகள் தொடர்பான தகவல்களுக்கான உள்ளடக்க ஆதரவுடன் அரசாங்க தகவல் நிலைய அறிவுத் தளங்கள் (GIC – 1919 மும்மொழி உதவி சேவை,GIC இணையம் மற்றும் சமூக ஊடகத் தளங்கள்) செயற்படுத்தப்படும். | தற்போது முன்னெடுக்கப்படுகிறது | டிசம்பர் 2020 |
| 2. அரசாங்க சேவைகள் தொடர்பான தகவல்களை மாற்றுத்திறன் மிக்க குடிமக்களுக்கு ஆதரவளிப்பதற்கு GIC-1919 இற்கான புதிய அம்சங்களை அறிமுகப்படுத்தல். | தற்போது முன்னெடுக்கப்படுகிறது | டிசம்பர் 2020 |
| 3. GIC-1919தளங்களின் ஊடாக வழங்கப்பட்ட அரசாங்க சேவைகள் பற்றிய குடிமக்களின் விழிப்புணர்வை அதிகரிப்பதற்கு பல்வேறு தொடர்பாடல் அணுகுமுறைகள் நடைமுறைப்படுத்தப்படும். குடிமக்களின் பங்குபற்றலுடன் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை GIC-1919தொடர்பான குடிமக்களின் விழிப்புணர்வு தொடர்பில் ஆய்வுகள் முன்னெடுக்கப்படும்.ஆறு மாத இடைவெளியில் ஆய்வு அறிக்கைகள் பகிரங்கமாக வெளிப்படுத்தப்படும். | ஜனவரி 2019 | டிசம்பர் 2020 |
| 4. www.data.gov.lk இல் நடாத்தப்படும் திறந்த தரவுத் தொகுதிகளின் எண்ணிக்கை 300இலிருந்து, 2,000ஆக அதிகரிக்கப்படும். | தற்போது முன்னெடுக்கப்படுகிறது | டிசம்பர் 2020 |
| 5. அனைத்து அரசாங்க இணையத் தளங்களினதும் வினைத்திறனானது அவற்றின் செயற்பாட்டின் அடிப்படையில் தரப்படுத்தப்படும். வருடத்திற்கு இரு முறை மதிப்பீட்டு அறிக்கை தயாரிக்கப்படும். | ஜனவரி 2019 | ஜூன் 2020 |

| **தொடர்புத் தகவல்** | | |
|---|---|---|
| நடைமுறைப்படுத்தல் நிறுவனத்தில் பொறுப்பில் உள்ள நபரின் பெயர்: | | திரு வருண ஶ்ரீ தனபால |
| பதவி நிலை, திணைக்களம் | | சிரேட்ட உதவி செயலாளர் (அபிவிருத்திக்கான ICT)<br>தொலைத்தொடர்புகள், எண்ணிம உட்கட்டமைப்பு மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு |
| மின்னஞ்சல், தொலைபேசி | | மின்னஞ்சல்: sas-ict4d@mtdi.gov.lk; warunatr@gmail.com<br>தொ.பே: 94 112577017<br>கைபேசி: 94 777356781 |
| சம்பந்தப்பட்ட ஏனைய செயற்பாட்டாளர்கள் | சம்பந்தப்பட்ட அரச செயற்பாட்டாளர்கள் | Mr Damith Hettihewa, CEO, இலங்கை தகவல் மற்றும் தொலைத்தொடர்புகள் தொழிநுட்ப நிறுவனம் (ICTA)<br>160/24, Kirimandala mawatha, Colombo 05<br>Phone - 011 – 2369099 (Office)/0777 – 339300 (Mobile)<br>Fax – 011 2369091<br>email – ceo@icta.lk |
| | CSO, தனியார் துறை, பல்தரப்பு செயற்குழுக்கள் | சர்வோதய கலப்பு மற்றும் ஜிஜசி அழைப்பு நிலைய நடத்துநர்<br>திரு. இசுறு சில்வா , வியாபார ஆலோசனையாளர்- மூலோபாய முகாமைத்துவம் மற்றும் சென்றடைவு, சர்வோதய – பியுசன் , 726 கோட்டே ரோட், B 120, ஶ்ரீ ஜயவர்தனபுர கோட்டே<br>telephone – 0112 867590(Office)<br>077 – 310675(Mobile)<br>email – isura@fusion.lk / info@fusion.lk |

| உறுதிமொழி # 7: விவசாய தீர்மானம் எடுத்தல் ஆதரவு மற்றும் விவசாய வர்த்தக ஆதரவு முறைமையின் ஊடாக விவசாயிகளை வலுப்படுத்தல். | |
|---|---|
| 1 ஒக்டோபர் 2018 – 30 செப்ரம்பர் 2020 | |
| முன்னணி நடைமுறைப்படுத்தல் நிறுவனம்/செயற்பாட்டாளர் | **விவசாயம் என்ற விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சு** |
| **உறுதிமொழி விளக்கம்** | |
| உறுதிமொழி அடையாளப்படுத்தப் போகும் பொதுப் பிரச்சினை என்ன? | பருவ கால விவசாயம் சார் உற்பத்தி தளம்பல் மற்றும் விலை தளம்பல் என்பன மிகவும் மோசமான வகையில் விவசாயிகளின் வருமானத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. ஏற்கனவே விதைக்கப்பட்ட அளவு, பரிந்துரைக்கப்பட்ட பயிர்கள் மற்றும் வகைகள், விவசாய உள்ளீடு கிடைக்கக் கூடிய தன்மை, தொழிநுட்ப கிடைக்கக் கூடிய தன்மை, ஆலோசனைக்கு அணுக வேண்டிய உள்ளக அதிகாரிகள் தொடர்பான பருவகால தகவல்களை கண்டறிய முடியாமையால் இது நிகழ்கின்றது.இந்த நிலையற்ற சூழலானது பயிர் உற்பத்தி வாழ்வாதாரங்களை விவசாயிகள் கைவிட காரணமாகின்றது. மேலும், அவசர காலஉணவு இறக்குமதிகளில் தாமதமும், தேசிய அல்லது பிராந்திய உணவுப் பாதுகாப்பை பாதிக்கும். |
| உறுதிமொழி என்ன? | விவசாயம் தொடர்பான அனைத்து தேவையான தகவல்களை அணுகுவதற்கு தனியான தளம் ஒன்றினை விவசாயிகளுக்கு வழங்குவதும்,விவசாய தொழிலை வசதியளித்து, தமது வருமானத்தை மேம்படுத்துவதற்கு உகந்த நேரத்தில் தீர்மானங்களை எடுக்க வலுப்படுத்துவதும் இந்த உறுதிமொழியின் நோக்கமாகும்.இணையம் சார் மற்றும் கைபேசி சார் வலையமைப்புக்கள் போன்ற பல்வேறு வழிகளின் ஊடாக அணுகும் வசதி ஆதரவளிக்கப்படும். |
| பொது பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உறுதிமொழியானது எவ்வாறு பங்களிக்கும்? | மேலதிக விவசாயம்சார் உற்பத்தியை குறைப்பதற்கும்,விவசாயிகளுக்கு நியாயமான வருமானத்தை உறுதி செய்யும் விலை தளம்பங்களை குறைப்பதற்கும், பயிர் உற்பத்திகள் தொடர்பில் நுகர்வோருக்கு உகந்த விலையை உறுதி செய்வதற்கும் இந்த உறுதிமொழி பங்களிக்கும்.பல்வேறு தகவல் கட்டமைப்புக்களில் இருந்து விவசாய தகவல்களை இ-தளமானது சேகரித்து, விவசாயிகளுக்கு, விவசாய தொழில் செயற்பாட்டாளர்களுக்கு, அதிகாரிகள் மற்றும் கொள்கை வகுப்பவர்குளுக்கு தகவலுக்கான அணுகும் வசதியை மேம்படுத்தும். விவசாயம் சார் கேள்வி மற்றும் விநியோகம் தொடர்பான தகவலுக்கான ஆயத்தமான அணுகும் வசதி, மற்றும் விலை தகவல்கள் என்பன விவசாய சந்தைச் செயற்பாடுகளில் வினைத்திறன் இன்மைகளை குறைக்கும். விவசாயிகளுக்கு பயன்படுத்துவதற்கு எளிதான கைபேசி செயலி ஒன்றின் ஆதரவுடன், தகவல் வழங்கல் துணைத் தளம் மற்றும் இணைய வகைப்படுத்தப்பட்ட துணை தளம் என்ற இரண்டு துணை அம்சங்களை கொண்ட இ-தளம் ஒன்றை இந்த உறுதிமொழி வழங்கும்.பயிர் எதிர்வுகூறல் தகவல், கிடைக்கக் கூடிய விதைகள், காலநிலை மற்றும் வானிலை தகவல், பூச்சி மேற்பார்வை, மண் அறிக்கையிடல் முறைகள் மற்றும் விலைத் தகவல் போன்ற விவசாயத் திணைக்களத்தின் ஏனைய பாரிய தகவல் முறைமைகளால் உருவாக்கப்பட்ட வெளியீடுகள் / அறிக்கை / தகவல் உள்ளடக்கிய விவசாய துறைக்கான பொதுவான தளம் ஒன்று விருத்தி செய்யப்படும்.ஏற்கனவே அறுவடை செய்யப்பட்ட அளவுகள், பரிந்துரைக்கப்பட்ட பயிர்கள் மற்றும் வகைகள், கிடைக்கக் கூடிய விவசாய உள்ளீடு, கிடைக்கக் கூடிய தொழிநுட்பம், ஆலோசனைக்காக தொடர்பு கொள்ள வேண்டிய உள்ளக அதிகாரிகள் தொடர்பான தகவல்களை இந்தத் தளம் வழங்கும். மேலதிகமாக, விவசாயிகளால் விளம்பரங்களை பதிவிடுவதற்கான மற்றும் அணுகுவதற்கான அன்ரோய்ட் செயலியின் உதவியுடன் விவசாய சந்தைப்படுத்தலை ஆதரவளிப்பதற்கான இணைய விளம்பர சேவை ஒன்றும் உருவாக்கப்படும். |
| OGP விழுமியங்களுக்கு ஏன் இந்த உறுதிமொழி சம்பந்தப்படுகின்றது? | இந்த தளமான விவசாயத் தகவல்களுக்கான அணுகும் வசதியை மேம்படுத்துவதால் **தகவலுக்கான அணுகும் வசதி**யின் திறந்த அரசாங்க பங்குடைமையை இந்த உறுதிமொழி பரவலாக்கும். விவசாயம் சார் கேள்வி மற்றும் விநியோகத்தின் அடிப்படையில் தகவல் விநியோகத்திற்கு வசதியளிக்கப்படும். விவசாயிகளுக்கான விலை குறித்த தகவலில் **வெளிப்படைத்தன்மை**யை அது முன்னிறுத்தும். |

| | |
|---|---|
| மேலதிக தகவல்: | அவசரகால உணவு இறக்குமதிகள் தொடர்பான வர்த்தக அமைச்சினால் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு இந்த உறுதிமொழி ஆதரவளிக்கும். விவசாய அமைச்சின் விவசாய நிகழ்ச்சியான *அபி வவலாய் அபி கன்னே* (நாம் வளர்த்தே, நாம் உண்போம்) என்ற நிகழ்ச்சிக்கு ஆதரவளிக்கும். *நிலைபேறான இலங்கை: தொலைநோக்கு மற்றும் மூலோபாய வழி* மற்றும் *தொலைநோக்கு 2025 வரைபுநகலில்* பரிந்துரைகள் மற்றும் உறுதிமொழிகள். |

| சரிபார்க்கக் கூடிய வழங்கக்கூடியவையுடன் மைற்கல் நடவடிக்கை | ஆரம்ப திகதி: | முடிவுத் திகதி: |
|---|---|---|
| 1. பயிர் அறுவடை மற்றும் பயிர் எதிர்வுகூறல் தகவலைப் பெறுவதற்கு விவசாயிகளுக்கு கிடைக்கக் கூடிய தரவுத் தளங்களின் முழுமையான செயற்பாடு மற்றும் புதுப்பித்தல். | தற்போது முன்னெடுக்கப்படுகின்றது | டிசம்பர் 2020 |
| 2. பயிர் பரிந்துரை, கிடைக்கக் கூடிய விதை, கிடைக்கக் கூடிய தொழிநுட்பம், ஆலோசனை மற்றும் சந்தைத் தகவல்களுக்காக தொடர்பு கொள்ள வேண்டிய உள்ளக அதிகாரிகள் போன்ற விவசாயம் தொடர்பான சம்பந்தப்பட்ட தகவல்களை பெறுவதற்கான விவசாயிகளுக்கான தீர்மான ஆதரவு கருவி ஒன்றாக இ-விவசாயத் தளம் உள்ளது.தற்போதுள்ள தரவுத் தளங்களை புதுப்பித்தல், இ-விவசாய தளத்துடன் இணைப்பதற்கு API உருவாக்கம் மற்றும் தேவையாயின் புதிய தரவுத்தளங்களின் அபிவிருத்தி. | ஜனவரி 2019 | டிசம்பர் 2020 |
| 3. பயிர் உற்பத்திகள் தொடர்பான நாளாந்த விலைப் பட்டியலைப் பெறுவதற்கு விவசாயிகளுக்கான தரவுத் தளம் ஒன்று உருவாக்கப்பட்டது. A database is developed for farmers to receive daily price list on crop produces. | ஜனவரி 2019 | டீசம்பர் 2020 |
| 4. விவசாயத்தில் உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தையினை கண்டறிவதற்கான சாத்தியத்துடன் விவசாயத் துறையின் வாங்குபவர் மற்றும் விற்பவரினை இணைய / கைபேசி செயலி சார் சேவைகள் அறிமுகப்படுத்தப்படல். | ஜனவரி 2019 | டீசம்பர் 2020 |
| 5. தகவல் தொழிநுட்ப உட்கட்டமைப்பு அபிவிருத்தி, விரிவாக்கம் மற்றும் இயலுமை கட்டியெழுப்பல். | ஜனவரி 2019 | டீசம்பர் 2020 |

**தொடர்புத் தகவல்**

| | | |
|---|---|---|
| நடைமுறைப்படுத்தல் நிறுவனத்தில் பொறுப்பில் உள்ள நபரின் பெயர்: | | திரு. எஸ் பெரியசாமி |
| பதவி நிலை, திணைக்களம் | | பணிப்பாளர் (தகவல் மற்றும் தொடர்பாடல்) |
| மின்னஞ்சல், தொலைபேசி | | periyasamy.doa@gmail.com 081 2030040 |
| சம்பந்தப்பட்ட ஏனைய செயற்பாட்டாளர்கள் | சம்பந்தப்பட்ட அரச செயற்பாட்டாளர்கள் | விவசாயத் திணைக்களம், விவசாய அபிவிருத்தி திணைக்களம், மாகாண விவசாயத் திணைக்களம், மகாவலி அதிகார சபை, ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆய்வு கல்வி நிறுவனம் (HARTI), தகவல் தொழில்நுட்பம் ; தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவனம் (ICTA), என்ற விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சு, இலங்கை ஹதபிம அதிகார சபை |
| | CSO, தனியார் துறை, பல்தரப்பு செயற்குழுக்கள் | |

| உறுதிமொழி # 8: 3200 அடையாளங் காணப்பட்ட குறைந்த வருமான குடும்பங்களுக்கான வீடுகளை ஒதுக்கலை தீர்மானிப்பதில் மாற்றுத்திறனுடைய நபர்களின் பங்குபற்றலுக்கான பொறியமைப்பு ஒன்றினை 2020 இறுதியில் நடைமுறைப்படுத்தல். | |
|---|---|
| 1 ஒக்டோபர் 2018 – 30 செப்ரம்பர் 2020 | |
| முன்னணி நடைமுறைப்படுத்தல் நிறுவனம்/செயற்பாட்டாளர் | **வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை என்ற விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சு** |
| **உறுதிமொழி விளக்கம்** | |
| உறுதிமொழி அடையாளப்படுத்தப் போகும் பொதுப் பிரச்சினை என்ன? | மக்கள் தொகையில் 1.6 மில்லியன் (8.7 வீதம்) மாற்றுத்திறனாளிகள் பல்வேறு பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர். மாற்றுத்திறனாளிகளில் 1.1 மில்லியன் பேரில், 29 வீதமானோர் மாத்திரமே பொருளாதார செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர்.மாற்றுத்திறனுடன் வாழ்பவர்களில் வேலைவாய்ப்பின்மை மற்றும் வறுமை வீதம் அதிகமாக உள்ளது. சம்பளம் மற்றும் சுய-வேலைவாய்ப்பு ஆகிய இரண்டுக்குமான வேலைவாய்ப்பு சந்தர்ப்பம் இன்மையால் அவர்களுக்கான வருமானம் ஈட்டல் சந்தர்ப்பம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. பொருளாதார வழிகளில் பற்றாக்குறை என்பது, பெரும்பாலான மக்கள்தொகை வீடொன்றை கொண்டிருப்பதற்கும்,தன்னிறைவானவர்களாக இருப்பதற்கும், பாதுகாப்பாக இருப்பதற்கும் முடியாதவர்களாக இருக்கின்றனர்.பொது மற்றும் தனியர் துறை நிறுவனங்களில் தற்போதுள்ள வீடமைப்பு கடன் திட்டங்களை அணுகுவதற்கான வரையறுக்கப்பட்ட சந்தர்ப்பங்கள், மாற்றுத்திறனுடன் வசிக்கும் குடும்பங்களுக்கான வீடமைப்புக்கான அரசாங்க ஒதுக்கீடு இன்மை,அரசாங்க வீடமைப்பு நிகழ்ச்சிகளில் மாற்றுத்திறன் இசைவான வீடமைப்பு வசதிகளின் பற்றாக்குறை,மற்றும் மாற்றுத்திறன் அல்லது வறுமையின் காரணமாக அரசாங்கத்தினால் எதிர்பார்க்கப்பட்ட தொழிலாளர்களாக பங்களிக்க முடியாமை உள்ளடங்கலாக பல விடயங்கள் இதற்கு காரணமாக உள்ளன.தீர்மானம் எடுத்தல் செயற்பாடுகுளில் பொது பங்குபற்றலக்கான அவர்களது உரிமையை தடுக்கும் பல்வேறு சமூக தடைகளும் உள்ளன. |
| உறுதிமொழி என்ன? | 2020 அளவில் அடையாளங் காணப்பட்ட 3200 பேருக்கு மாற்றுத்திறனுக்கு ஏற்ற வீடமைப்பு வசதிகளை வழங்குவதன் மூலம் மாற்றுத்திறனுடன் வசிப்பவர்களுக்கு பொருளாதார மற்றும் சமூக பிரதிகூலங்களை குறைப்பதற்கு இந்த உறுதிமொழி எதிர்பார்க்கின்றது. |
| பொது பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உறுதிமொழியானது எவ்வாறு பங்களிக்கும்? | 2025 அளவில் மாற்றுத்திறனாளிகளுக்கு வீடமைப்பு வழங்குவதற்கான வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டினை வீடமைப்பு அமைச்சு கோரும். பங்கேற்பு முறையில் மாற்றுத்திறனாளிகளின் வீடமைப்பு பிரச்சினைகளை அடையாளப்படுத்துவதற்கு தேசிய வீடமைப்பு செயற் குழு ஒன்றினை அமைப்பதற்கு அமைச்சரவை அனுமதி பெறப்படும். மாவட்ட மட்டத்தில் சம்பந்தப்பட்ட பங்குதாரர்களின் பங்கேற்புடன் இந்த வீடமைப்பு நிகழ்ச்சி நடைமுறைப்படுத்தப்படும். அத்துடன், காலாண்டு இடைவெளியில் கண்காணிக்கப்படும். அத்தகைய வசதிகளை வழங்குவதன் மூலம், தன்னிறைவு பெற்றவர்களாக, பாதுகாப்பானவர்களாக மாறுவதற்கு குறிப்பிடத்தக்க அளவு ஒதுக்கப்பட்ட மக்கள் தொகை வலுப்படுத்தப்படும். |
| OGP விழுமியங்களுக்கு ஏன் இந்த உறுதிமொழி சம்பந்தப்படுகின்றது? | மாற்றுத்திறனாளிகள் சமுதாயமானது தீர்மானம் எடுத்தல் மற்றும் செயற்பாட்டின் கண்காணித்தலில் பங்குபற்றக் கூடிய பொறியமைப்பு ஒன்றினை வழங்குவதால் இந்த உறுதிமொழியானர் **பொது பங்கேற்பு** மற்றும் **வெளிப்படைத்தன்மையை** முன்னிறுத்துகின்றது. |
| மேலதிக தகவல்: | இந்த உறுதிமொழியானது இலங்கையில் மாற்றுத்திறன் சட்டவாக்க பிரிவுகளை முன்னிறுத்துகின்றது தேசிய மனித உரிமைகள் நடவடிக்கைத் திட்டம் 2017-2021*நிலைபேறான இலங்கை: தொலைநோக்கு மற்றும் மூலோபாய வழி* மற்றும் *தொலைநோக்கு 2025 வரைபுநகலில்* பரிந்துரைகள் மற்றும் உறுதிமொழிகள் எழுந்தமான நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளில் மாற்றுத்திறன் உரிமைகளுக்கு செல்வாக்கு செலுத்த இலக்கு வைக்கின்றது. |

| சரிபார்க்கக் கூடிய வழங்கக்கூடியவையுடன் மைற்கல் நடவடிக்கை | ஆரம்ப திகதி: | முடிவுத் திகதி: |
|---|---|---|
| 1. 2025 அளவில் வீடமைப்புத் தேவையை நிறைவு செய்வதற்கு | செப்ரம்பர் 2018 | நவம்பர் 2018 |

| | | |
|---|---|---|
| மாற்றுத்திறனாளிகளுக்கு வீடமைப்பு வழங்குவதற்கான செயற்றிட்ட பிரேரணையானது தயாரிக்கப்பட்டு, விசேட வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடும் பெறப்படும். | | |
| 2. மாற்றுத்திறனாளிகளின் வீடமைப்பு பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு மற்றும் செயற்பாட்டினை கண்காணிப்பதற்கு அனைத்து சம்பந்தப்பட்ட பங்குதாரர்களினதும் பங்குபற்றலை உறுதி செய்யும் கட்டளை ஒன்றுடன் தேசிய வீடமைப்பு செயற்குழு ஒன்றினை உருவாக்குவதற்கு அமைச்சரவை அனுமதி பெறப்படும். தமது உறுப்புரிமையில் மாற்றுத்திறனாளிகளை இந்த செயற்குழு உள்ளடக்கும். | நவம்பர் 2018 | நவம்பர் 2018 |
| 3. மாவட்ட மட்டத்தில் சம்பந்தப்பட்ட பங்குதாரர்களின் பங்குபற்றலுடன் வீடமைப்பு நிகழ்ச்சியானது நடைமுறைப்படுத்தப்படும். | ஜனவரி 2019 | ஆகஸ்ட் 2020 |
| 4. வீடமைப்பு நிகழ்ச்சியின் தேர்ச்சியானது காலாண்டு அடிப்படையில் கண்காணிப்புக்கு உட்படுத்தப்படும். | காலாண்டு | செப்ரம்பர் 2020 |

| **தொடர்புத் தகவல்** | | |
|---|---|---|
| நடைமுறைப்படுத்தல் நிறுவனத்தில் பொறுப்பில் உள்ள நபரின் பெயர்: | | Mr M I A Wahabdeen – Director<br>Ms H S D Jayatillake - Assistant Director |
| பதவி நிலை, திணைக்களம் | | Director – 071 8014077 email – mjawahabdeen@yahoo.com<br>Assistant Director – 077 5860598 |
| மின்னஞ்சல், தொலைபேசி | | |
| சம்பந்தப்பட்ட ஏனைய செயற்பாட்டாளர்கள் | சம்பந்தப்பட்ட அரச செயற்பாட்டாளர்கள் | தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை; சமூக நலனோம்புகை என்ற விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சு; வலதுகுறைவுடைய ஆட்களுக்கான தேசிய செயலகம்; நிதி அமைச்சு ; உள்நாட்டலுவல்கள் என்ற விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சு. |
| | CSO, தனியார் துறை, பல்தரப்பு செயற்குழுக்கள் | *மாற்றுத்திறனாளிகளின் நிறுவனங்களின் ஒருங்கிணைந்த முன்னணி (Disability Organisations Joint Front (DOJF))* |

| உறுதிமொழி # 9: UNCRPD உடன் இசைந்ததாக பொது மக்களின் பங்குபற்றலுடன் மாற்றுத்திறன் உரிமைகள் சட்டமூலத்தை உருவாக்கி, 2020 அளவில் பாராளுமன்றத்தால் இயற்றுதல். | |
|---|---|
| 1 ஒக்டோபர் 2018 – 30 செப்ரம்பர் 2020 | |
| முன்னணி நடைமுறைப்படுத்தல் நிறுவனம்/செயற்பாட்டாளர் | **சமூக நலனோம்புகை என்ற விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சு** |
| **உறுதிமொழி விளக்கம்** | |
| உறுதிமொழி அடையாளப்படுத்தப் போகும் பொதுப் பிரச்சினை என்ன? | சமூகத்தில் உள்ள ஏனையோரைப் போன்று மாற்றுத்திறனாளிகள் சமமான உரிமைகள் மற்றும் சலுகைகளை அனுபவிப்பதில்லை. சமூகத்தில் பௌதீக மற்றும் உளியல் தடைகளின் காரணமாக ஏனைய குடிமக்களால் அனுபவிக்கப்படும் அடிப்படை உரித்துக்கள் அவர்களுக்கு கிடைப்பதில்லை. இலங்கையில், 1.6 மில்லியன் (8.7 வீதம்) பேர் மாற்றுத்திறனுடன் வசிக்கின்றனர். தற்போதைய, 1996ஆம் ஆண்டு 28ம் இலக்க மாற்றுத்திறனாளிகள் சட்டமானது, கல்வி, வேலைவாய்ப்புக்கான அணுகும் வசதி மற்றும் பொது இடங்களுக்கான அணுகும் வசதி என்பவற்றுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. 2016ஆம் ஆண்டில் UNCPRD இன் (மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள் தொடர்பான ஐ.நா சாசனம்) ஏற்புறுதியுடன் UNCPRD உடன் இணைந்ததாக உள்ளக சட்டம் ஒன்றை தயாரிப்பதற்கு அரசாங்கம் பொறுப்புடையதாகின்றது.எவ்வாறாயினும், உத்தேச மாற்றுத்திறன் சட்டமூலமானது, 1) நடைமுறைப்படுத்தல் ஒருங்கிணைப்பு, மற்றும் 2) UNCPRD இன் உறுப்புரை 33இற்கு அமைய சுயாதீன கண்காணித்தல், ஆகிய இரண்டு தனியான பொறியமைப்புக்களின் இன்மையுடன் உருவாக்கப்பட்டுள்ளது. |
| உறுதிமொழி என்ன? | பொது கலந்தாய்வுகளின் அடிப்படையில் மற்றும் UNCPRD இற்கு இசைவாக சமூக நலன்புரி மற்றும் ஆரம்பக் கைத்தொழில்கள் அமைச்சினால் திருத்தப்பட்ட சட்டமூலம் ஒன்றை தயாரிப்பதே இந்த உறுதிமொழியின் நோக்கமாகும். |
| பொது பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உறுதிமொழியானது எவ்வாறு பங்களிக்கும்? | UNCPRD இன் உறுப்புரை 33இற்கு அமைய மாற்றுத்திறன் சட்டத்தில் 2 தனியான பொறியமைப்புக்களை உள்வாங்கல், எ.கா. நடைமுறைப்படுத்தல் ஒருங்கிணைப்பு மற்றும் சுயாதீன கண்காணித்தல் என்பன மாற்றுத்திறனாளிகளின் வாழ்க்கைத் தரம் மேம்பட உதவும். மாற்றுத்திறனாளிகளால் தொடர்பாடலுக்கு ஏற்ற வகையில் சட்டமூலத்தின் வரைபினை அணுக முடியும். மாற்றுத்திறனாளிகளின் உரிமைகளைச் சுட்டிக்காட்டும் மாற்றுத்திறனாளிகள் உரிமைகள் சட்டத்தின் ஏற்பாடுகள் தொடர்பான நாடளாவிய ரீதியான பிரசாரமானது பகிரங்கமாக முன்னெடுக்கப்படும். |
| OGP விழுமியங்களுக்கு ஏன் இந்த உறுதிமொழி சம்பந்தப்படுகின்றது? | மாற்றுத்திறனாளிகளின் உரிமைகளை முன்னிறுத்தல் மற்றும் உறுதிசெய்வதற்கு சட்டவாக்கத்திற்கு வழங்குவதால் **பொது பொறுப்புடைமையை** உறுதிமொழி முன்னிறுத்துகின்றது. |
| மேலதிக தகவல்: | இந்த உறுதிமொழியானது இலங்கையில் மாற்றுத்திறன் சட்டவாக்க பிரிவுகளை முன்னிறுத்துகின்றது தேசிய மனித உரிமைகள் நடவடிக்கைத் திட்டம் 2017-2021*நிலைபேறான இலங்கை: தொலைநோக்கு மற்றும் மூலோபாய வழி* மற்றும் *தொலைநோக்கு 2025 வரைபுநகலில்* பரிந்துரைகள் மற்றும் உறுதிமொழிகள் எழுந்தமான நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளில் மாற்றுத்திறன் உரிமைகளுக்கு செல்வாக்கு செலுத்த இலக்கு வைக்கின்றது. |

| சரிபார்க்கக் கூடிய வழங்கக்கூடியவையுடன் மைற்கல் நடவடிக்கை | ஆரம்ப திகதி: | முடிவுத் திகதி: |
|---|---|---|
| 1. விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சினால் UNCPRD இற்கு இசைவாக பொது கலந்தாய்வின் அடிப்படையில் தற்போதுள்ள சட்டமூலம் திருத்தப்படல். | ஆரம்பித்து விட்டது | நவம்பர் 2018 |
| 2. பின்னூட்டம் மற்றும் கருத்துக்களுக்காக மாற்றுத்திறனாளிகளுக்கு அணுகக் கூடிய மாற்று வழிகளில் வரைபு கிடைக்கக் கூடியதாக இருக்கும் (எ.கா. பிறெய்ல், சைகை மொழி போன்ற). | ஜூன் 2019 | ஒக்டோபர் 2019 |
| 3. பாராளுமன்ற துணைக்குழுவின் அனுமதி மற்றும் பாராளுமன்றத்தால் | நவம்பர் 2019 | மார்ச் 2020 |

| | | |
|---|---|---|
| திருத்தப்பட்ட சட்டமூலம் இயற்றப்படல். | | |
| 4. மாற்றுத்திறனாளிகளின் உரிமைகளை சுட்டிக்காட்டுவதன் மூலம் திருத்தப்பட்ட மாற்றுத்திறனாளிகள் உரிமைகள் சட்டத்தின் ஏற்பாடுகள் தொடர்பான நாடளாவிய ரீதியிலான பிரசாரத்தை அமைச்சு நடைமுறைப்படுத்தும். | ஏப்ரல் 2020 | ஆகஸ்ட் 2020 |

| **தொடர்புத் தகவல்கள்** | | |
|---|---|---|
| நடைமுறைப்படுத்தல் நிறுவனத்தில் பொறுப்பில் உள்ள நபரின் பெயர்: | | Mr M I A Wahabdeen – Director<br>Ms H S D Jayatillake - Assistant Director |
| பதவி நிலை, திணைக்களம் | | Director – 071 8014077 email – mjawahabdeen@yahoo.com<br>Assistant Director – 077 5860598 |
| மின்னஞ்சல், தொலைபேசி | | |
| சம்பந்தப்பட்ட ஏனைய செயற்பாட்டாளர்கள் | சம்பந்தப்பட்ட அரச செயற்பாட்டாளர்கள் | *தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை ; மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய செயலகம் ; நிதி அமைச்சு; உள்நாட்டலுவல்கள் அமைச்சு* |
| | CSO, தனியார் துறை, பல்தரப்பு செயற்குழுக்கள் | *மாற்றுத்திறனாளிகளின் நிறுவனங்களின் ஒருங்கிணைந்த முன்னணி (Disability Organisations Joint Front (DOJF))* |

| | |
|---|---|
| **உறுதிமொழி # 10: பங்கேற்பு முறையுடன் அனர்த்த முகாமைத்துவச் செயற்பாடுகளை அனர்த்த முகாமைத்துவத்திற்கு பொறுப்பான அமைச்சு அடையாளங் கண்டு, தயாரித்து, நடைமுறைப்படுத்தி, கண்காணித்தல்.** | |
| 1 ஒக்டோபர் 2018 – 30 செப்ரம்பர் 2020 | |
| முன்னணி நடைமுறைப்படுத்தல் நிறுவனம்/செயற்பாட்டாளர் | **அனர்த்த முகாமைத்துவ அமைச்சு ; அனர்த்த முகாமைத்துவ நிலையம்** |
| **உறுதிமொழி விளக்கம்** | |
| உறுதிமொழி அடையாளப்படுத்தப் போகும் பொதுப் பிரச்சினை என்ன? | அண்மைக் காலமாக இலங்கையின் வானிலை மற்றும் காலநிலையில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. கடுமையான மழைவீழ்ச்சி, வெள்ளம், மண்சரிவு, வரட்சி மற்றும் மின்னல் என்பன அதிகரித்துள்ளன. மக்கள் தொகையில் குறிப்பிட்ட எண்ணிக்கையிலானோர் குறிப்பாக மக்கள் தொகையில் செல்வாக்கு குறைந்தவர்கள், அடிமட்டத்தில் போதியளவு முன்னாயத்தம் இன்மையால் இந்த இயற்கை அனர்த்தங்களால் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளனர். அண்மைக் காலமாக இயற்கை அனர்த்தங்களின் காரணமாக உயிரிழப்புக்கள், காயங்கள் மற்றும் சொத்து இழப்புக்கள் ஏற்பட்டுள்ளன.அனர்த்தங்களுக்கு அதிகரித்த பலவீனத் தன்மையானது குறிப்பிடத்தக்க பொருளாதார மற்றும் சமூக சுமையினை குடிமக்கள் மீது ஏற்படுத்தியுள்ளது. வழங்கப்பட்ட நிவாரண மற்றும் நிதியுதவியிலும் பெரும் கறையை ஏற்படுத்தியுள்ளன. |
| உறுதிமொழி என்ன? | அனர்த்த முகாமைத்துவத்திற்குப் பொறுப்பான அமைச்சு மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் என்பன, சமுதாயங்கள், பாதிக்கப்பட்ட மக்கள், மற்றும் ஏனைய பங்குதாரர்களுடன், அவர்களது தேவைகளை அடையாளங் காண்பதற்கும், தற்போதுள்ள அனர்த்த முன்னாயத்த திட்டங்களை மீளாய்வு செய்வதற்கும், மற்றும் அனர்த்த முகாமைத்துவ வழிகாட்டிகளை தயாரிப்பதற்கும் இணைந்து செயற்படும்.வழிகாட்டிகளை நடைமுறைப்படுத்தல் தொடர்பில் பங்குதாரர்களுக்கு பயிற்சி வழங்கப்படும். மாவட்ட, பிரதேச மற்றும் கிராம சேவகர் பிரிவு மட்டத்தில் அனர்த்த முன்னாயத்த திட்டங்களை தயாரிப்பதில் சமுதாயங்கள் ஈடுபடும்.முன்னெச்சரிக்கை செய்திகளை வழங்குவதற்கு கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்படும். ஏனைய சமுதாயத்தினருக்கு செய்தி தெரிவிப்பதற்கு குறுஞ்செய்தி ஊடாக முன்னெச்சரிக்கை செய்திகளை சமுதாயத் தலைவர்கள் வழங்குவர்.மாவட்ட, பிரதேச, மற்றும் கிராம சேவகர் பிரிவு திட்டங்கள் தொடர்பில் அரசாங்க மறுசீரமைப்பு பொறியமைப்பு உள்ளடங்கலாக ஒரு முழுமையான அனர்த்த முன்னாயத்த நிகழ்ச்சியை தயாரிப்பதனை ஒவ்வொரு அமைச்சும் பொறுப்பேற்கும். |
| பொது பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உறுதிமொழியானது எவ்வாறு பங்களிக்கும்? | முழுமையான அனர்த்த முன்னாயத்த திட்டங்கள், அனர்த்த முகாமைத்துவ வழிகாட்டிகள் மற்றும் முன்னெச்சரிக்கை முறைமைகளை நடைமுறைப்படுத்தல் ஊடாக இயற்கை அனர்த்தங்களுக்கு எதிர்வினையாற்றுவதற்கு தேசிய தயார் நிலை மற்றும் சமுதாயங்களின் ஆற்றலை இந்த உறுதிமொழி பரவலாக்கும். அனர்த்தங்களின் காரணமாக உயிரிழப்பு, காயமடைதல் மற்றும் சொத்து சேதம் என்பன குறைக்கப்படலாம். அத்துடன், அனர்த்த தாக்கங்களினால் சமுதாயங்கள் மற்றும் அரசாங்கத்திற்கு ஏற்படும் சுமையையும் குறைக்கும். ஒட்டுமொத்தமாக, அனர்த்த முகாமைத்துவ செயற்பாட்டின் வினைத்திறனை அதிகரித்தல் மற்றும் குடிமக்கள் மீதான சுமையை குறைத்தலில் அனர்த்த தனித்தல் நடவடிக்கைகளில் அடையாளப்படுத்தல், தயார்படுத்தல், நடைமுறைப்படுத்தல் மற்றும் கண்காணித்தல் என்பவற்றில் சமுதாய ஈடுபாடு என்பது மிகவும் முக்கியமான காரணியாகும். |
| OGP விழுமியங்களுக்கு ஏன் இந்த உறுதிமொழி சம்பந்தப்படுகின்றது? | தமது வாழ்க்கைய பாதிக்கும் முக்கியமான அம்சங்கள் தொடர்பில் கருத்துக்களை வழங்குவதற்கும், திட்டங்களின் நடைமுறைப்படுத்தலில் பங்குபற்றுவதற்கும் குடிமக்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படுவதால் **பொதுமக்கள் பங்குபற்றலை** இந்த உறுதிமொழி முன்னிறுத்துகின்றது. குடிமக்களால் **தகவலுக்கான அணுகும்வசதியையும்** அது முன்னிறுத்துகின்றது. |
| மேலதிக தகவல்: | 2005ஆம் ஆண்டு அனர்த்த முகாமைத்துவ சட்டத்தின் நடைமுறைப்படுத்தல்: இந்த உறுதிமொழி வலுப்படுத்துகின்றது மற்றும் முன்னிறுத்துகின்றது. *நிலைபேறான இலங்கை: தொலைநோக்கு மற்றும்* |

<table>
<tr><td colspan="2"></td><td colspan="3">மூலோபாய வழி மற்றும் தொலைநோக்கு 2025 வரைபுநகலில் பரிந்துரைகள் மற்றும் உறுதிமொழிகள் எழுந்தமான நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளில் அனர்த்த தவிர்ப்பு மற்றும் நெகிழ்வுதன்மைக்கு இலக்கு வைக்கின்றது.</td></tr>
<tr><td colspan="4">சரிபார்க்கக் கூடிய வழங்கக்கூடியவையுடன் மைற்கல் நடவடிக்கை</td><td>ஆரம்ப திகதி:</td><td>முடிவுத் திகதி:</td></tr>
<tr><td colspan="4">1. பாதிக்கப்பட்ட நபர்கள். சமுதாயம் சார் நிறுவனங்கள் மற்றும் ஏனைய பங்குதாரர்கள் உள்ளடங்கலாக ஒரு கலந்தாய்வுச் செயற்பாட்டின் ஊடாக தற்போதுள்ள முன்னாயத்த திட்டங்களை அனர்த்த முகாமைத்துவ நிலையம் மீளாய்வு செய்யும்.</td><td>ஒக்டோபர் 2018</td><td>மார்ச் 2019</td></tr>
<tr><td colspan="4">2. மாவட்ட, பிரதேச மற்றும் கிராம சேவகர் பிரிவு மட்டங்களில் அனர்த்த முன்னாயத்த திட்டங்களை தயாரிப்பதற்கு சமுதாய மற்றும் பங்குதாரர்களுக்கு அனர்த்த முகாமைத்துவ நிலையம் வசதியளிக்கின்றது.</td><td>ஏப்ரல் 2019</td><td>டிசம்பர் 2019</td></tr>
<tr><td colspan="4">3. ஒதுக்கப்பட்ட அல்லது பலவீனமாக குழுக்களுடன் கலந்தாய்வு செயற்பாடு ஒன்றின் உடாக அனர்த்த முகாமைத்துவ வழிகாட்டிகள் தயாரிக்கப்படும். தேவைகளை அடையாளங் காண்பதற்கு அனைத்து பங்குதாரர்களுடனும் கலந்தாய்வு கூட்டங்கள் நடைபெறும். வழிகாட்டிகள் பகிரப்படும் என்பதுடன்,வழிகாட்டிகளின் நடைமுறைப்படுத்தல் தொடர்பான பயிற்சியானது பங்குதாரர்களுக்கு வழங்கப்படும்.</td><td>ஒக்டோபர் 2019</td><td>மே 2020</td></tr>
<tr><td colspan="4">4. சமுதாயங்களில் உள்ளவர்களுக்கு முன்னெச்சரிக்கை செய்தியை வழங்குவதற்கு வினைத்திறன் மிக்க முறை ஒன்று உருவாக்கப்படல். பிரதேசத்தின் ஏனைய சமுதாய உறுப்பினர்களுக்கு தெரிவிப்பதற்கு அடையாளங் காணப்பட்ட சமுதாயத் தலைவர்களுக்கு குறுஞ்செய்தியூடான முன்னெச்சரிக்கை செய்திகள் வழங்கப்படும்.</td><td>ஏப்ரல் 2019</td><td>டிசம்பர் 2019</td></tr>
<tr><td colspan="4">5. மாவட்ட பிரதேச மற்றும் கிராம சேவகர் திட்டங்களின் அடிப்படையில், ஒரு முழுமையான அனர்த்த முன்னாயத்த நிகழ்ச்சி, அரசாங்க மறுசீரமைப்பு பொறியமைப்பு உள்ளடங்கலாக, ஒவ்வொரு அமைச்சினாலும் தயாரிக்கப்படும்.</td><td>ஜனவரி 2020</td><td>மே 2020</td></tr>
<tr><td colspan="6">தொடர்புத் தகவல்கள்</td></tr>
<tr><td colspan="2">நடைமுறைப்படுத்தல் நிறுவனத்தில் பொறுப்பில் உள்ள நபரின் பெயர்:</td><td colspan="4">Dr S Amalanadan</td></tr>
<tr><td colspan="2">பதவி நிலை, திணைக்களம்</td><td colspan="4">Director general, Disaster management Centre</td></tr>
<tr><td colspan="2">மின்னஞ்சல், தொலைபேசி</td><td colspan="4">email – dg@dmc.gov.lk<br>TP – 011 2136100<br>077 3957896</td></tr>
<tr><td rowspan="2">சம்பந்தப்பட்ட ஏனைய செயற்பாட்டாளர்கள்</td><td>சம்பந்தப்பட்ட அரச செயற்பாட்டாளர்கள்</td><td colspan="4">National Disaster Relief Services Centre, National Building Research Organization, Department of Irrigation, Meteorological Department, Central Environmental Authority, Coast Conservation Department, Natoinal Aquatic Resources, Research & Development Agency</td></tr>
<tr><td>CSO, தனியார் துறை, பல்தரப்பு செயற்குழுக்கள்</td><td colspan="4">Related CSOs</td></tr>
</table>

| உறுதிமொழி # 11: தேசிய சுற்றுச்சூழல் கொள்கையில் காலநிலை மாற்ற சவால்கள் முழுமையான உள்ளீர்க்கப்பட்டு, சுற்றுச்சூழலுக்கு பொறுப்பான அமைச்சினால் பங்கேற்பு முறையில் செயற்படல். | |
|---|---|
| 1 ஒக்டோபர் 2018 – 30 செப்ரம்பர் 2020 | |
| முன்னணி நடைமுறைப்படுத்தல் நிறுவனம்/செயற்பாட்டாளர் | **சுற்றாடல் அமைச்சு** |
| **உறுதிமொழி விளக்கம்** | |
| உறுதிமொழி அடையாளப்படுத்தப் போகும் பொதுப் பிரச்சினை என்ன? | கடந்த ஒரு தசாப்த காலமாக மிகவும் மோசமான வானிலையை இலங்கை எதிர்கொண்டு வருகின்றது. நீடித்த வரட்சி, வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவு போன்ற இயற்கை அனர்த்தங்கள் என்பன முக்கியமாக அம்சங்களாக மாறியுள்ளதுடன், காலத்தில் அதிகரித்தும் உள்ளன. நாடு முழுவதிலும் காலநிலை சார்ந்த அனர்த்தங்கள் குறிப்பிடத்தக்க தாக்கத்தைக் கொண்டிருக்கின்றன. அனர்த்த அபாயம் கொண்ட மாவட்டங்களிலும், கிராமப்புற விவசாய மக்கள் தொகையிலும் வறிய குடும்பங்கள் குறிப்பாக பாதிக்கப்படுகின்றன.உயிர் மற்றும் வாழ்வாதார இழப்பு, சொத்து சேதம் மற்றும் இடப்பெயர்வு என்பன, இடைக்கால மற்றும் நீண்ட கால அபிவிருத்தி திட்டங்களின் செலவாக நிவாரண மற்றும் மீட்சி முயற்சிகளுக்காக செலவிடப்படும் அரசாங்க நிதியில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. காலநிலை மாற்ற அம்சங்கள் கவனத்தில் கொள்ளப்படாமையினால் பொருத்தமற்ற திட்டமிடல் செயற்பாடுகளினால் இவற்றில் சில அனர்த்தங்கள் இடம்பெறுகின்றன. தற்போதுள்ள தேசிய சுற்றுச்சூழல் கொள்கை மற்றும் சட்டம் என்பன போதியளவில் காலநிலை மாற்ற கரிசனைகளை கவனத்தில் கொள்வதில்லை. |
| உறுதிமொழி என்ன? | நாட்டின் தேசிய சுற்றுச்சூழல் கொள்கை மற்றும் சட்டத்தில் காலநிலை மாற்ற அம்சங்களை குறிப்பாக அடையாளப்படுத்துவதும்,காலநிலை மாற்ற உள்வாங்கல் மற்றும் தணித்தலுக்கு பரிந்துரைகளை முன்வைப்பதுமே இந்த உறுதிமொழியின் நோக்கமாகும்.சுற்றுச் சூழலுக்கு பொறுப்பான அமைச்சானது மீளாய்வு செய்வதற்கு அனைத்து பங்குதாரர்களுடனும் கலந்தாய்வு செய்து, காலநிலை மாற்ற அம்சங்களை அடையாளப்படுத்துவதற்கும், காலநிலை மாற்ற உள்வாங்கல் மற்றும் தணித்தலுக்கு பரிந்துரைகளை முன்வைப்பதற்கும் தற்போதுள்ள சுற்றுச் சூழல் கொள்கை மற்றும் சட்டத்தை திருத்தும். |
| பொது பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உறுதிமொழியானது எவ்வாறு பங்களிக்கும்? | தற்போதுள்ள தேசிய சுற்றுச்சூழல் கொள்கை மற்றும் சட்டம் என்பன போதியளவில் காலநிலை மாற்ற கரிசனைகளை கவனத்தில் கொள்ளாமையை அங்கீகரித்து, முழுமையாக காலநிலை மாற்ற விடயங்களை அடையாளப்படுத்துவதற்கு உதவும் வகையில் திருத்துவதற்கு இந்த உறுதிமொழி பொறுப்பேற்கும். காலநிலை மாற்றத்தின் அபாயங்கள் காரணமாக,வறியவர்கள் மற்றும் பலவீனமாவர்கள் மீதான தாக்கத்தை குறைக்கும் சுற்றுச் சூழல் பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவத்திற்கான உயர் மட்ட கொள்கை முன்னுரிமைப்படுத்தலை இது வழங்கும். மேலும், நெருக்கடிகளை கடப்பதற்கும், அனர்த்தங்களைத் தவிர்ப்பதற்குமான வழிகளை தீர்மானிப்பதற்குகுறுகிய, இடை மற்றும் நீண்ட காலங்களில் காலநிலையானது எவ்வாறு மாற்றம் பெறும் என்பது குறித்து திட்டமிடல் மற்றும் தீர்மானம் எடுத்தலில் ஈடுபட்டுள்ளோர் அறிந்திருக்க வேண்டும். |
| OGP விழுமியங்களுக்கு ஏன் இந்த உறுதிமொழி சம்பந்தப்படுகின்றது? | தமது வாழ்க்கையை பாதிக்கும் அரசாங்க தீர்மானங்களிற்கு உள்ளீடுகளை வழங்குவதற்கு அரசாங்க கொள்கை உருவாக்கம் மற்றும் சந்தர்ப்பங்களில் குடிமக்களின் குரல் எழுப்புவதால் இந்த உறுதிமொழி **பொது பங்கேற்பினை** முன்னிறுத்துகின்றது. |
| மேலதிக தகவல்: | காலநிலை மாற்றத்திற்கு நேரடியாக மற்றும் மறைமுகமாக செல்வாக்கும் செலுத்தும் SDG 13மற்றும் ஏனைய இலக்குகளை அடையாளப்படுத்துவதற்கு தயாரிக்கப்பட்ட மொன்ரியல் நெறிமுறை மற்றும் நடவடிக்கைத் திட்டங்களின் கீழுள்ள அனைத்துத் தேவைகளை இலங்கை பூர்த்தி செய்துள்ளது.<br>காலநிலை மாற்ற அச்சுறுத்தலுக்கான உலகளாவிய எதிர்வினையை வலுப்படுத்தும் பாரிஸ் பிரகடனத்தையும் இலங்கை கையெழுத்திட்டு, |

| | | | |
|---|---|---|---|
| | ஏற்புறுதி செய்துள்ளது.<br>2005ஆம் ஆண்டு அனர்த்த முகாமைத்துவ சட்டத்தின் நடைமுறைப்படுத்தல்: இந்த உறுதிமொழி வலுப்படுத்துகின்றது மற்றும் முன்னிறுத்துகின்றது. *நிலைபேறான இலங்கை: தொலைநோக்கு மற்றும் மூலோபாய வழி* மற்றும் *தொலைநோக்கு 2025 வரைபுநகலில்* பரிந்துரைகள் மற்றும் உறுதிமொழிகள்<br>நிலையான அபிவிருத்திக்கு நீல பச்சை அபிவிருத்தி மூலோபாயம்? | | |
| சரிபார்க்கக் கூடிய வழங்கக்கூடியவையுடன் மைற்கல் நடவடிக்கை | | ஆரம்ப திகதி: | முடிவுத் திகதி: |
| 1. காலநிலை மாற்ற உள்வாங்கல் மற்றும் தணித்தலை அடையாளப்படுத்துவதற்கு மேம்படுத்த வேண்டிய இடைவெளிகள் மற்றும் பகுதிகளை அடையாளங் காண்பதற்கு தற்போதுள்ள தேசிய சுற்றுச்சூழல் கொள்கையை மீளாய்வு செய்வதற்கு பரந்தளவு பங்குதாரர் கலந்தாய்வுகளை முன்னெடுத்தல். | | ஒக்டோபர் 2018 | டிசம்பர் 2018 |
| 2. பங்கேற்பு முறையில் காலநிலை மாற்ற அம்சங்களை முழுமையாக அடையாளப்படுத்தும் புதிய தேசிய சுற்றுச்சூழல் கொள்கை ஒன்றை உருவாக்கல். | | ஜனவரி 2019 | டிசம்பர் 2019 |
| **தொடர்புத் தகவல்கள்** | | | |
| நடைமுறைப்படுத்தல் நிறுவனத்தில் பொறுப்பில் உள்ள நபரின் பெயர்: | திரு.மகிந்த குணரத்ன | | |
| பதவி நிலை, திணைக்களம் | பணிப்பாளர் (கொள்கைத் திட்டமிடல் மற்றும் இயக்கம்), மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு | | |
| மின்னஞ்சல், தொலைபேசி | Email : pmgun@gmail.com<br>தொலைபேசி : 01122034150 கையடக்க தொலைபேசி: 0715861297 | | |
| சம்பந்தப்பட்ட ஏனைய செயற்பாட்டாளர்கள் | சம்பந்தப்பட்ட அரச செயற்பாட்டாளர்கள் | சுற்றாடல் அமைச்சின் கீழ்வரும் நிறுவனங்கள், வளிமண்டலவியல் திணைக்களம், இடர் முகாமைத்துவ நிலையம், கொள்கைக் கற்கைகள் நிறுவகம் | |
| | CSO, தனியார் துறை, பல்தரப்பு செயற்குழுக்கள் | சம்பந்தப்பட்ட சமூக நிறுவனங்கள் | |

**உறுதிமொழி # 12: 2020 அளவில் சம்பந்தப்பட்ட அமைச்சுக்களின் செயற்றிட்டங்களில் பெண்களுக்கு எதிரான அனைத்து வன்முறைகளை ஒழிப்பது தொடர்பான சாசனத்தின் (CEDAW)தெரிவு செய்யப்பட்ட நிறைவு அவதானிப்புக்களை நடைமுறைப்படுத்துவதற்கு வெளிப்படையான மற்றும் பதிலளிக்கக் கூடிய செயற்பாடு ஒன்றினை ஸ்தாபித்தல்.**

1 ஒக்டோபர் 2018 – 30 செப்ரம்பர் 2020

| | |
|---|---|
| முன்னணி நடைமுறைப்படுத்தல் நிறுவனம்/செயற்பாட்டாளர் | **மகளிர் விவகார அமைச்சு** |
| **உறுதிமொழி விளக்கம்** | |
| உறுதிமொழி அடையாளப்படுத்தப் போகும் பொதுப் பிரச்சினை என்ன? | 1981ஆம் ஆண்டு இலங்கை ஏற்புறுதி செய்த பெண்களுக்கு எதிரான அனைத்து பாரபட்சங்களையும் ஒழிப்பதற்கான சாசனத்தின் (CEDAW) கீழ்,பல்வேறு நிறைவு அவதானிப்புக்களை வழங்குவதற்கு நாடு கடப்பட்டுள்ள போதிலும்,தேர்ச்சியின் வேகம் மெதுவாகவே இருக்கின்றது. CEDAW ஏற்பாடுகளின் வினைத்திறன் மிக்க நடைமுறைப்படுத்தல் என்பது பெண்களால் தற்போது எதிர்நோக்கப்படும் பல பிரச்சினைகளை தவிர்த்திருக்கும். சட்ட பாதுகாப்பு இன்மையின் காரணமாக முறைசாரா துறையில் உள்ள பெண்கள் சமமற்ற சம்பளத்திற்கு ஆளாகின்றனர். தொழிற்படையில் பெண்களின் குறைவான பங்குபற்றலும் ஓர் பிரச்சினையாக அமைந்துள்ளது. பெண் குடும்பத் தலைவர்களும் பல்வேறு சமூக, கலாசார, பொருளாதார மற்றும் அரசியல் கரிசனைகளை எதிர்கொள்கின்றனர். அவை போதியளவில் அடையாளப்படுத்தப்படவில்லை. முறைசார் துறையில் வேலையிட பாலியல் மற்றும் பால்நிலை வன்முறையையும் பெண்கள் அனுபவிக்கின்றனர். அரசியல் ஆட்சிமுறையில் பெண்களின் குறைந்தளவு பிரதிநிதித்துவம் மற்றும் அரச காணிகளுக்கு பெண்களின் அணுகும் தன்மையில் குறைவு என்பனவும் இதில் உள்ளடங்குகின்றன. |
| உறுதிமொழி என்ன? | 2020 அளவில் சம்பந்தப்பட்ட அமைச்சுக்களின் செயற்றிட்டங்களில் CEDAW இன் தெரிவு செய்யப்பட்ட நிறைவு அவானிப்புக்களின் நடைமுறைப்படுத்தலை முன்னிறுத்துவதற்கு இந்த உறுதிமொழி எதிர்பார்க்கின்றது. அதன் மூலம் முறைசாரா துறையில் பெண்கள் பாரபட்சத்திற்கு ஆளாக்கப்படுவதனை தடுப்பதற்கான திட்டத்தை பரவலாக்குகின்றது. அரசியல் ஆட்சி முறையில் பெண்களின் பங்குபற்றலை அதிகரிக்கின்றது. பெண் குடும்பத் தலைவர்களுக்கான தேசிய கொள்கை உருவாக்கத்தில் பொறுப்புடைமை மற்றும் வெளிப்படைத் தன்மையை முன்னிறுத்துகின்றது. வேலையிடம் சார் பாலியல் பலாத்காரத்தை குறைக்கின்றது. அத்துடன், பெண்களை பாதிக்கும் பாரபட்சமான காணிச் சட்டங்களையும் அகற்றுகின்றது. தொழில்மற்றும் தொழிற்சங்க உறவுகள் என்ற விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சும் குறைந்தபட்ச வேதனத்திற்கான பொறிமுறையொன்றை முன்மொழிவதற்கு சித்தம் கொண்டுள்ளதோடு, தொழில் புரியும் இடங்களில் பாரபட்சமான செயற்பாடுகளுக்கெதிரான ஏற்பாடுகளையும் கொண்டிருக்கும். |
| பொது பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உறுதிமொழியானது எவ்வாறு பங்களிக்கும்? | சம அளவிலான பணிக்கு சமமான சம்பளங்களை பெறுவதற்கு அனைத்து முறைசாரா துறையின் ஊழியர்களுக்கும் கட்டாயமாக்கும் 'சமமான பெறுமதிக்கு சமமான வேலை கொடுப்பனவு' விதியை உருவாக்கல்.அதன் ஊடாக சட்டத்தின் மூலம் பாதுகாப்பு வழங்கல். இந்த சமத்துவமின்மையை ஒழிப்பதனை நோக்கிய திட்டதகை கண்காணிப்பதற்கு மற்றும் விரிவாக்குவதற்கு தேவையான கற்றலுக்கு பங்குதாரர்கள் கலந்தாய்வுகள் மற்றும் கண்காணித்தல் பங்களிக்கும்.பெண் குடும்பத் தலைவர்குளின் கரிசனைகளை அடையாளப்படுத்துவதற்கு தயாரிக்கப்பட்ட கொள்கைகள் மற்றும் திட்டங்கள், பெண் குடும்பத் தலைவர்களைச் செயற்பாட்டில் நேரடியாக பங்குபற்றச் செய்வதன் மூலம், மேலும் வெளிப்படையானதாகவும், வினைத்திறன் மிக்கதாகவும் இருக்கும். முறைசாரா துறையில் வேலையிட பாலியல் மற்றும் பால்நிலை சார் வன்முறை என்பன பாலியல் பலாத்கார குழுக்களின் நியமனம் ஊடாக குறைக்கப்படும். அரச காணிகள் சம்பந்தப்பட்ட சட்டங்களின் திருத்தமானது, அரச காணிகளுக்கான பெண்களின் அணுகும் வசதியை அதிகரிக்கும்.சிவில் சமூக நிறுவனங்களுடன் இணைந்து தேர்தல் சட்டங்களை திருத்துவதன் ஊடாக பாராளுமன்றத்தில் ஒதுக்கீட்டு முறைமையை வழங்குவது, அரசியல் ஆட்சிமுறையில் பெண்களின் பங்குபற்றல் அதிகரிப்பதற்கு பங்களிக்கும். |

| | |
|---|---|
| OGP விழுமியங்களுக்கு ஏன் இந்த உறுதிமொழி சம்பந்தப்படுகின்றது? | பலவீனமான குழுக்கள் உள்ளடங்கலாக பெண்களின் **பொது பங்குபற்றலை** இந்த உறுதிமொழி முன்னிறுத்துகின்றது. தீர்மானம் எடுத்தலில் பங்குபற்றலுக்கு மற்றும் செல்வாக்கு செலுத்துவதற்கு விசேட ஏற்பாடுகளை வழங்குகின்றது. தீர்மானங்கள் மற்றும் கலந்தாய்வுகள் தொடர்பான தகவல்களை வழங்குவதற்குகண்காணித்தல், பங்குதாரர்களின் பங்குபற்றல் மற்றும் சம்பந்தப்பட்ட பொது அதிகாரிகளுக்கான கடமைகள் என்பவற்றுக்கான பொறியமைப்புக்களின் ஊடாக **பொறுப்புடைமை** மேம்படுத்தப்பட்டுள்ளது. |
| மேலதிக தகவல்: | பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாரபட்சங்களையும் ஒழிப்பதற்கான சாசனத்தின் நடைமுறைப்படுத்தலுக்கு உறுதிமொழி ஆதரவளிக்கின்றதுதேசிய மனித உரிமைகள் நடவடிக்கைத் திட்டம் 2017-2021 பால்நிலை சமத்துவத்தினை கோரும் நிலையான அபிவிருத்தி இலக்கு இல. 5 நடைமுறைப்படுத்தல். |

| சரிபார்க்கக் கூடிய வழங்கக்கூடியவையுடன் மைற்கல் நடவடிக்கை | ஆரம்ப திகதி: | முடிவுத் திகதி: |
|---|---|---|
| 1. தொழில் அமைச்சினால் தனியொரு தொழில் சட்டம் வரையப்படும் என்பதோடு,அது “சமமான பெறுமதியுடைய வேலைக்கு சமமான சம்பளம் ” (சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தின் 100 ஆம் கடப்பாட்டிற்கமைய) என்பதையும் உள்ளடக்கும். முறைசாரா துறையில் கட்டாயமாக உருவாக்குவதற்கு தொழில் அமைச்சினால் விதிமுறைகள் நிறைவேற்றப்படும் (ஒழுங்குவிதிகளின் நடைமுறைப்படுத்தல் கண்காணிக்கப்பட்டு, முறைசாரா துறையில் சம்பளங்கள் தொடர்பான பால்நிலை ரீதியாக பிரிக்கப்பட்ட தரவுகள் தொழில் அமைச்சினால் சேகரிக்கப்படும். திறந்த தரவு வடிவத்தில் தொழில் அமைச்சின் இணையத்தளத்தில் மூன்று மொழிகளிலும் தேசிய கலந்தாய்வு அறிக்கை வெளியிடப்படும். | ஒக்டோபர் 2018 | மார்ச் 2020 |
| 2. பெண் குடும்பத் தலைவர்கள் அதிகமாக உள்ள மாவட்டங்களில் பெண் குடும்பத் தலைவர்கள் தொடர்பான தேசிய நடவடிக்கைத் திட்ட வரைபு குறித்து சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள் மற்றும் சிவில் சமூக நிறுவனங்களுடன் தேசிய மட்ட கலந்தாய்வு நடைபெறும். திறந்த தரவு வடிவத்தில் தொழில் அமைச்சின் இணையத்தளத்தில் மூன்று மொழிகளிலும் தேசிய கலந்தாய்வு அறிக்கை வெளியிடப்படும். இறுதி கொள்கை மற்றும் திட்டங்கள் பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்படும். | ஒக்டோபர் 2018 | ஜனவரி 2020 |
| 3. முறைசாரா துறைக்காக ஆகக் குறைந்தது 75 வீதமான அமைச்சுக்களில் பாலியல் பலாத்கார குழுக்கள் உருவாக்கப்படும். பெண்கள் விவகார அமைச்சினால் குழுக்களுக்கான பயிற்சி மற்றும் கண்காணித்தல் முன்னெடுக்கப்படும். தனிப்பட்ட அமைச்சுக்களின் இணையத்தளங்களில் மும்மொழிகளிலும் பாலியல் பலாத்கார குழுக்களின் வருடாந்த அறிக்கைகள் (உதாரணமாக, சம்பவங்களின் எண்ணிக்கை, சம்பவத்தின் தன்மை, எடுக்கப்பட்ட நடவடிக்கை, பாதிக்கப்பட்டவர் பாதுகாப்பு செயலேற்பாடுகள்) வெளியிடப்படும்.மகளிர் விவகார அமைச்சானது அனைத்து குழு அறிக்கைகளையும் ஒன்று திரட்டி, தமது இணையத்தில் வருடாந்தம் ஒரு அறிக்கையை மூன்று மொழிகளிலும் திறந்த தரவு வடிவத்தில் வெளியிடும். | ஒக்டோபர் 2018 | செப்ரம்பர் 2020 |
| 4. சிவில் சமூக நிறுவனங்களுடன் இணைந்து தேர்தல் சட்டங்களை திருத்தல் ஊடாக பாராளுமன்றத்தில் ஒதுக்கீட்டு முறைமை ஒன்றிற்கான அரசியல் கட்சிகளுடன் ஆதரவு நாடல் மற்றும் அழுத்தம் வழங்களை உறுதி செய்வதன் மூலம் பாராளுமன்றத்தில் ஆகக் குறைந்த மூன்றில் ஒரு பிரதிநிதித்துவம். அரசியல் கட்சிகளுடனான கலந்தாய்வு அறிக்கை அமைச்சின் இணையத்தளத்தில் 3 மொழிகளில் வெளியிடப்படும். | டிசம்பர் 2018 | ஆகஸ்ட் 2020 |
| 5. 2016-2018 OGP NAP இன் தொடர்ச்சியாக, காணிச் சட்டங்கள் பின்வருமாறு திருத்தப்படும்: அ) இணை உரிமைத்துவத்தில் அரச காணி ஒதுக்கீட்டை அனுமதித்தல்: M) LDO இன் அட்டவணை III இனை நீக்கல்: இ) அடுத்தடுத்தவை தொடர்பான பிரிவுகளை நீக்கல். | செப்ரம்பர் 2018 | டிசம்பர் 2019 |

| **தொடர்புத் தகவல்கள்** | |
|---|---|
| நடைமுறைப்படுத்தல் நிறுவனத்தில் | செல்வி சுவர்ணா சுமனசேக்கர |

| | | |
|---|---|---|
| பொறுப்பில் உள்ள நபரின் பெயர்: | | |
| பதவி நிலை, திணைக்களம் | | தலைவர், தேசிய மகளிர் குழு |
| மின்னஞ்சல், தொலைபேசி | | Email : swarnasumanasekara@gmail.com<br>தொலைபேசி : 0112187248 கையடக்க தொலைபேசி : 0713536007 |
| சம்பந்தப்பட்ட ஏனைய செயற்பாட்டாளர்கள் | சம்பந்தப்பட்ட அரச செயற்பாட்டாளர்கள் | தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு ; மாகாண சபைகள், மற்றும் உள்ளூராட்சி சபைகள் அமைச்சு; தேர்தல்கள் ஆணைக்குழு, சமூக வலுவூட்டல் எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சு, சட்ட ஆணைக்குழு, காணி அமைச்சு, நீதி அமைச்சு, மகளிர் தொடர்பான தேசிய குழு. |
| | CSO, தனியார் துறை, பல்தரப்பு செயற்குழுக்கள் | சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையம், விழுது, கொள்கை மாற்றங்களுக்கான நிலையம், கிராம பெண்கள் முன்னணி, மாற்றுத்திறனாளிகளின் நிறுவனங்களின் ஒருங்கிணைந்த முன்னணி |

| உறுதிமொழி # 13: உள்ளக சேவை விநியோகத்தை மேம்படுத்துவதற்கு குடிமக்கள் பங்குபற்றலுடன் பிரதேச சபைகளில் குழு முறைமையை வலுப்படுத்தல். | |
|---|---|
| 1 ஒக்டோபர் 2018 – 30 செப்ரம்பர் 2020 | |
| முன்னணி நடைமுறைப்படுத்தல் நிறுவனம்/செயற்பாட்டாளர் | மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு |
| **உறுதிமொழி விளக்கம்** | |
| உறுதிமொழி அடையாளப்படுத்தப் போகும் பொதுப் பிரச்சினை என்ன? | நாட்டின் உள்ளூராட்சி அரசாங்க முறைமையில் பிரதேச சபைகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. அத்துடன், பல்வேறு உள்ளூர் சேவைகளை வழங்குவதில் பொறுப்புடையதாக இருக்கின்றன. 1987ம் ஆண்டு 15ம் இலக்க பிரதேச சபை சட்டமானது, சபை குழுக்களுக்கான உருவாக்கத்தை வழங்குகின்றன. அத்துடன், தீர்மானம் எடுத்தல் செயற்பாடுகளில் குடிமக்களின் பங்குபற்றலை ஏதுவாக்குகின்றன.தற்போது இந்த பிரிவு இரு சபைகளாலும், குடிமக்களாலும் முறையாக பயன்படுத்தப்படவில்லை. பெரும்பாலான குடிமக்கள் தீர்மானம் எடுத்தல் செயற்பாட்டில் இருந்து விலக்கப்பட்டவதாக கருதுகின்றனர். அத்துடன், தாம் பெறும் சேவைகளில் அதிருப்தி அடைந்துள்ளனர். தமது பகுதியில் ஏற்படும் விடயங்களை அடையாளங் காண்பதற்கு மற்றும் பிரதேச சபைகளின் அடிப்படைச் செயற்பாடுகளை வசதியளிப்பதற்கு பிரதானமான துணை சட்டங்கள் போதியதாக இல்லை. |
| உறுதிமொழி என்ன? | சிறந்த கொள்கைகள் மற்றும் மேம்பட்ட உள்ளக சேவை வழங்கலை பரிந்து பேசுவதற்கு பிரதேச சபைகளுடன் ஈடுபடுவதற்கு குடிமக்களின் ஆற்றலை பரவலாக்குவதற்கு இந்த உறுதிமொழி இலக்கு வைத்துள்ளது. இலங்கையில் பெரும்பாலான மக்கள் பிரதேச சபை பகுதிகளில் வசிக்கின்றனர். குடிமக்கள் பங்குபற்றலுடன் இந்த சபைகளில் சமுதாய கட்டமைப்புக்களை வலுப்படுத்துவதற்கான உறுதியான தேவை உள்ளது. குழுக்களில் பங்குபற்றலானது கட்டமைக்கப்பட்ட மற்றும் சபைகளுக்கும், குடிமக்களுக்கும் இடையிலான தொடரும் உரையாடலை உருவாக்குவதற்கு உதவும். தமது சமுதாயத் தேவைகளை சிறந்த கவனத்திற்கு கொண்டு வருவதற்கும், வரவு செலவுத் திட்ட தயாரிப்புகள் மற்றும் செயற்றிட்ட அபிவிருத்தியில் ஈடுபடுவதற்கும் அத்தகைய சூழல் மிகவும் பயனுள்ளதாகும்.சபையின் நிர்வாக விடயங்களை கலந்துரையாடுவதற்கான சந்தர்ப்பங்களை குழுக் கூட்டங்கள் வழங்குகின்றன. அதன் மூலம், சபையின் வினைத்திறன் மற்றும் தேர்ச்சியை அதிகரிக்கின்றன. |
| பொது பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உறுதிமொழியானது எவ்வாறு பங்களிக்கும்? | மேல் மாகாணத்தின் 3 மாவட்டங்களில் மூன்று பிரதேச சபைகள் குடிமக்கள் பங்கேற்புடன் குழுக்கள் உருவாக்குவதற்கான பரீட்சார்த்த சபைகளாக தெரிவு செய்யப்படும்.விழிப்புணர்வு உருவாக்கம், தொழிநுட்ப ஆதரவு மற்றும் திறன்கள் என்பன குழுக்களின் வினைத்திறன் மிக்கச் செயற்பாட்டிற்கு வழங்கப்படும். தேவையான ஆகக் கூடியது 5 துணைச் சட்டங்கள் பங்கேற்பு முறையின் ஊடாக அடையாளங் காணப்பட்டு, உருவாக்கப்படும். மேல் மாகாணத்தில், மாகாண சபை மட்டத்தில் 'பிரஜாமண்டல' வலுப்படுத்தலுக்கான நியதிச் சட்டம் உருவாக்கப்படும். பிரதேச சபை, நகர சபைகள் மற்றும் மாநகர சபைகளில் அனுபவத்தை ஆதரவளிப்பதற்கு மற்றும் பிரதிபலிப்பதற்கு பொறியமைப்பு ஒன்று வழங்கப்படும். அத்துடன், பிரதேச சபைகளில் குடிமக்கள் பங்குபற்றலுடன் குழு முறைமையை வலுப்படுத்துவதற்கான மற்றும் நகர சபைகள் மற்றும் மாநகர சபைகளுக்கு வெற்றிகரமாக கொண்டு செல்வதற்கான உறுதியான தேவை உள்ளது. |
| OGP விழுமியங்களுக்கு ஏன் இந்த உறுதிமொழி சம்பந்தப்படுகின்றது? | சபையின் தீர்மானம் எடுத்தல் செயற்பாட்டில் குடிமக்கள் தொடர்ச்சியான அடிப்படையில் ஈடுபடுவதால் **பொது பங்குபற்றலை** இந்த உறுதிமொழி முன்னிறுத்துகின்றது.சபையின் செயற்பாடுகள், செலவு விடயங்கள், வருமான சேகரிப்பு போன்றன குறித்து அறிவு குடிமக்களுக்கு வழங்கப்படுவதால் **வெளிப்படைத் தன்மையையும்** அது முன்னிறுத்துகின்றது. |
| மேலதிக தகவல்: | 1987ம் ஆண்டு 15ம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் நடைமுறைப்படுத்தலை இந்த உறுதிமொழி வலுப்படுத்துகின்றது. நாட்டின் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தினாலும் அதற்கு ஆதரவளிக்கப்படுகின்றது. |

| சரிபார்க்கக் கூடிய வழங்கக்கூடியவையுடன் மைற்கல் நடவடிக்கை | ஆரம்ப திகதி: | முடிவுத் திகதி: |
|---|---|---|
| 1. மூன்று மாவட்டங்களை பிரதிநிதித்துவம் செய்யும் பரீட்சார்த்த சபைகள் மேல் மாகாணத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்டு, சபை குழு முறைமை தொடர்பான அடிப்படை விழிப்புணர்வு சபை உறுப்பினர்கள் மற்றும் குடிமக்களுக்கு வழங்கப்படும். சபை குழுக்களில் குடிமக்கள் பங்குபற்றலின் ஆற்றலில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் பிரதிபலிக்கும். | நவம்பர் 2018 | பெப்ரவரி 2019 |
| 2. பரீட்சார்த்த சபைகளில் குடிமக்கள் பிரதிநிதித்துவத்துடன் குழுக்கள் உருவாக்கப்படும். குழுக்களின் செயற்பாட்டிற்கான தொழிநுட்ப ஆதரவு மற்றும் திறன்கள், புற வசதியளிப்பவர்களின் உதவியுடன் வழங்கப்படும். | பெப்ரவரி 2019 | பெப்ரவரி 2020 |
| 3. சபை குழுக்களுடனான கலந்தாய்வில் ஆகக் கூடியது ஐந்து துணை சட்டங்கள் உருவாக்கப்படும். புற ஆலோசகர் ஒருவரினால் வசதியளிக்கப்பட்ட கலந்தாய்வு செயற்பாட்டின் ஊடாக அவசியமாகவுள்ள தேவைகளின் அடிப்படையில் துணைச்சட்டங்கள் அடையாளங் காணப்படும்.சட்ட அதிகாரிகள் மற்றும் மேல் மாகாண சபையின் ஆதரவுடன் இது உருவாக்கப்படும். | ஏப்ரல் 2019 | டிசம்பர் 2019 |
| 4. மேல் மாகாண சபையில் - மாகாண மட்டத்தில் 'பிரஜாமண்டல' வலுப்படுத்தலுக்கான நியதிச்சட்டம் உருவாக்கப்படும். | ஜனவரி 2019 | ஜூன் 2019 |
| 5. பிரதேச சபை, நகர சபை மற்றும் மாநகர சபைகளில் அனுபவத்தை வெளிப்படுத்துவதற்கு ஆதரவளிக்கும் வகையில் பொறியமைப்பு ஒன்று வழங்கப்படும். | ஜனவரி 2020 | மார்ச் 2020 |

| **தொடர்புத் தகவல்கள்** | | |
|---|---|---|
| நடைமுறைப்படுத்தல் நிறுவனத்தில் பொறுப்பில் உள்ள நபரின் பெயர்: | | Ms K S Subhadra Walpola |
| பதவி நிலை, திணைக்களம் | | Senior Assistant Secretary (Local Government), Ministry of Provincial Councils, Local Government & Sports |
| மின்னஞ்சல், தொலைபேசி | | email – saslg@pclg.gov.lk<br>TP – 011 2345971<br>Mobile – 071 4114735 |
| சம்பந்தப்பட்ட ஏனைய செயற்பாட்டாளர்கள் | சம்பந்தப்பட்ட அரச செயற்பாட்டாளர்கள் | *மேல் மாகாண சபை, உள்ளூராட்சி ஆணையாளர், மேல் மாகாணத்தின் தெரிவு செய்யப்பட்ட பிரதேச சபைகள* |
| | CSO, தனியார் துறை, பல்தரப்பு செயற்குழுக்கள் | *உள்ளூர் அரசாங்க அதிகாரிகளின் சம்மேளனம், சிவில் சமூக நிறுவனங்கள், சமுதாயம் சார் நிறுவனங்கள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட உள்ளூராட்சி பகுதிகளில் ஏனைய பங்குதாரர்கள்* |

| உறுதிமொழி # 14: பயணிகளின் தேவை மற்றும் பின்னூட்டத்தின் அடிப்படையில் பொது பேருந்து போக்குவரத்தை மேம்படுத்தல். | |
|---|---|
| 1 ஒக்டோபர் 2018 – 30 செப்ரம்பர் 2020 | |
| முன்னணி நடைமுறைப்படுத்தல் நிறுவனம்/செயற்பாட்டாளர் | **போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு** |
| **உறுதிமொழி விளக்கம்** | |
| உறுதிமொழி அடையாளப்படுத்தப் போகும் பொதுப் பிரச்சினை என்ன? | பயணி கிலோமீற்றர் ஒன்றுக்கு சுமார் 45 சதம் என்ற தற்போதைய பங்குடன் பேருந்து போக்குவரத்தின் செல்வாக்கு நிறைந்ததாக பொதுப் போக்குவரத்து உள்ளது. பல வருடங்களாக, தமது நாளாந்த போக்குவரத்தில் சிறிதளவு முன்னேற்றங்களையே இலங்கை மக்கள் பெற்றிருக்கின்றனர்.மிகவும் மோசமான தரத்திலான போக்குவரத்து வசதிகள், போதியதற்ற போக்குவரத்து வசதிகள், பயணிகள் மற்றும் போக்குவரத்து அதிகார சபைகளுக்கு இடையில் போதியளவு இணைப்பு மற்றும் பங்களிப்பு இன்மையின் காரணமாக நாளாந்த போக்குவரத்தில் அவர்கள் பல சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.பேருந்து பயணிகளின் உரிமைகள் தொடர்பில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுக்கான வழிகாட்டிகள் உள்ளன. ஆனால், அவற்றில் பெரும்பாலானவை சேவை வழங்குனர்களால் முறையாக பின்பற்றப்படவில்லை.<br>மாகாண மற்றும் தேசிய போக்குவரத்து அதிகார சபைகளால் ஒழுங்குபடுத்தப்பட்ட இலங்கை போக்குவரத்துச் சபையினால் நடத்தப்படும் அரசுக்கு சொந்தமான 2,000 பேருந்துகள் மற்றும் தனியார் தொழில் முனைவோருக்குச் சொந்தமான 20,000 தனியார் பேருந்துகளால், பேருந்து போக்குவரத்து வழங்கப்படுகின்றது. |
| உறுதிமொழி என்ன? | குடிமக்களிடம் இருந்து பெறப்பட்ட பின்னூட்டம் தொடர்பில், அவர்களது கரிசனைகள் மற்றும் கருத்துக்களின் அடிப்படையில் பேருந்து போக்குவரத்தின் தரம் மற்றும் நம்பகத்தன்மையை மேம்படுத்துவது சார்ந்ததே இந்த உறுதிமொழியாகும். |
| பொது பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உறுதிமொழியானது எவ்வாறு பங்களிக்கும்? | மாகாண மற்றும் தேசிய போக்குவரத்து அதிகார சபைகளால் ஒழுங்குபடுத்தப்பட்ட இலங்கை போக்குவரத்துச் சபையினால் நடத்தப்படும் அரசுக்கு சொந்தமான 2,000 பேருந்துகள் மற்றும் தனியார் தொழில் முனைவோருக்குச் சொந்தமான 20,000 தனியார் பேருந்துகளால், பேருந்து போக்குவரத்து வழங்கப்படுகின்றது.கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் பயணிகள் சங்கங்கள் உருவாக்கப்படும். இந்த பயணிகள் சங்கங்களின் ஊடாக பயணிகள் தேவைகள் பற்றிய அடிப்படை தகவல்களை சேகரிப்பதற்கான முழுமையான ஆய்வு முன்னெடுக்கப்படும். அனைத்து பங்குதாரர்களினதும் பங்குபற்றலுடன் போக்குவரத்து சார் தரவுத் தளம் உருவாக்கப்பட்டு, பேணப்படும். |
| OGP விழுமியங்களுக்கு ஏன் இந்த உறுதிமொழி சம்பந்தப்படுகின்றது? | குடிமக்கள் தமது கரிசனைகளை மற்றும் கருத்துக்களை வழங்குவதற்கான ஒரு பொறியமைப்பாக **பொது மக்கள் பங்குபற்றலை** இந்த உறுதிமொழி விரிவாக்குகின்றது. அத்துடன், அவர்களது இன்னல்களையும் அடையாளப்படுத்துகின்றது. தகவல் சேகரிப்பு மற்றும் தொடர்பாடலுக்கான இணையத்தின் ஊடாக**பகிரங்கத் தன்மை மற்றும் நம்பகத்தன்மைக்கானதொழிநுட்பம் மற்றும் புத்தாக்கத்தினை** அது முன்னிறுத்துகின்றது. |
| மேலதிக தகவல்: | 1987ம் ஆண்டு 15ம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் நடைமுறைப்படுத்தலை இந்த உறுதிமொழி வலுப்படுத்துகின்றது. நாட்டின் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் ஊடாகவும் அதற்கு ஆதரவளிக்கப்படுகின்றது. |

| சரிபார்க்கக் கூடிய வழங்கக்கூடியவையுடன் மைற்கல் நடவடிக்கை | ஆரம்ப திகதி: | முடிவுத் திகதி: |
|---|---|---|
| 1. 100 பயணிகள் சங்கங்களை கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் உருவாக்குவதன் மூலம் பரீட்சார்த்த செயற்திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படும். | செப்ரம்பர் 2018 | டிசம்பர் 2018 |
| 2. கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் பயணிகள் சங்கங்களின் ஊடாக பயணிகளின் தேவைகள் பற்றிய அடிப்படை தகவல்களை சேகரிப்பதற்கு முழுமையான ஆய்வு முன்னெடுக்கப்படும். | ஜனவரி 2019 | மார்ச் 2019 |

| | | |
|---|---|---|
| 3. போக்குவரத்து சம்பந்தப்பட்ட தகவல் தரவுத்தளம் உருவாக்கப்பட்டு, போக்குவரத்து அமைச்சின் இணையத்தளம் ஊடாக அணுகும் வசதி வழங்கப்படும். | ஏப்ரல் 2019 | ஜூன் 2019 |
| 4. பயணிகளிடமிருந்து போக்குவரத்து சேவை தொடர்பான பின்னூட்டம் பெறப்பட்டு தேசிய போக்குவரத்து ஆணைக்குழவினால் ஒருங்கிணைத்தல் பொறியமைப்பு ஒன்று வடிவமைக்கப்படும். அத்துடன். இன்னல்களை கையாளும் பொறியமைப்பு ஒன்றும் அமைக்கப்படும். | ஜூலை 2019 | 2020 முதல் |

| **தொடர்புத் தகவல்கள்** | | |
|---|---|---|
| நடைமுறைப்படுத்தல் நிறுவனத்தில் பொறுப்பில் உள்ள நபரின் பெயர்: | | Mr S S A Kularatne |
| பதவி நிலை, திணைக்களம் | | Director (Planning), Ministry of Transport & Civil Aviation |
| மின்னஞ்சல், தொலைபேசி | | Email – ssskule@gmail.com<br>TP – 011 2186182<br>Mobile – 071 8401838 |
| சம்பந்தப்பட்ட ஏனைய செயற்பாட்டாளர்கள் | சம்பந்தப்பட்ட அரச செயற்பாட்டாளர்கள் | தேசிய போக்குவரத்து ஆணைக்குழு, வீதி பயணிகள் போக்குவரத்து அதிகார சபை, மேல் மாகாண சபை |
| | CSO, தனியார் துறை, பல்தரப்பு செயற்குழுக்கள் | பயணிகள் சங்கங்கள் அல்லது பேருந்து உரிமையாளர்கள் சங்கம் |

**உறுதிமொழி 15: சிறுவர் தொடர்பான ஐநா சமவாயத்தின் இறுதி அவதானிப்புகளை ஒரு பங்கேற்பு முறையில் அமுல்படுத்துவதன்மூலம் பிள்ளைநேய சூழலொன்றை ஏற்படுத்துவதை ஊக்குவித்தல்**

2019 மார்ச் 1 - 2021 ஓகஸ்ட் 31

| | |
|---|---|
| முன்னணி நடைமுறைப்படுத்தல் நிறுவனம்/செயற்பாட்டாளர் | **சிறுவர் அலுவல்கள் என்ற விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சு** |
| **உறுதிமொழி விளக்கம்** | |
| உறுதிமொழி அடையாளப்படுத்தப் போகும் பொதுப் பிரச்சினை என்ன? | 1991 இல் சிறுவர் தெடர்பான ஐக்கிய நாடுகள் சமவாயத்தை(UNCRC) ஏற்றங்கீகரித்தமையினால் இலங்கைச் சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சர்வதேச கடப்பாடுகளுக்கு இலங்கை கட்டுண்டுள்ளது. இது தொடர்பாக, சிறுவர் உரிமைகள் தொடர்பான குழு ஒவ்வொரு அரச தரப்பினாலும் சமர்ப்பிக்கப்படும் தகவல்களை மீளாய்வு செய்து இக்கடப்பாடுகளில் ஏற்பட்ட முன்னேற்றங்களைக் கண்காணிப்பதோடு, சிறுவர்களின் நிலைமையை மேம்படுத்த அரசுக்கு உதவுமுகமாக பரிந்துரைகளை அல்லது "இறுதி அவதானிப்புகளை" மேற்கொள்ளும்.<br><br>2018 இல் மேற்கொள்ளப்பட்ட இலங்கை தொடர்பான மிகப் பிந்திய இறுதி அவதானிப்புகள் சிறுவர் உரிமைகளின் மீறல்களுக்கு இட்டுச் செல்லும் பிரதான காரணிகளை இனங்கண்டுள்ளதோடு, அவற்றை எவ்வாறு தடுக்கலாம் என்பது தொடர்பாக பரிந்துரைகளை மேற்கொள்கிறது. இலங்கை அதன் அடுத்த காலாந்த அறிக்கையை 2023 ற்கு முன்னதாக சமர்ப்பிக்கவேண்டியுள்ளதோடு, தற்போதைய இறுதி அவதானிப்புகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பின்தொடர் நடவடிக்கைகள்பற்றிய தகவல்களை அதில் உள்ளடக்கவேண்டியுமுள்ளது. சிறுவர் உரிமைகள் தொடர்பான குறைந்தளவு சமூக விழிப்புணர்வு் சிறுவர் உரிமைகள்மீதான காலநிலை மாற்றத்தின் தாக்கங்கள் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகள் குடும்ப சூழலொன்று மறுக்கப்படும் சிறுவர்கள் சிறுவர் உரிமைகள்மீது காலநிலை மாற்றத்தின் தாக்கங்கள் உள்நாட்டில் இடம்பெயர்ந்த சிறுவர்கள் சிறுவர் ஆட்கடத்தல்கள் முதலியன உள்ளிட்ட பல பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான பரிந்துரைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனினும், இப்பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்கான பொறுப்பினை கொண்டுள்ள தரப்பினரின் திறனும் அறிவும் குறைந்த மட்டத்திலேயே உள்ளன. |
| உறுதிமொழி என்ன? | சம்பந்தப்பட்ட UNCRC இறுதி அவதானிப்புகளை அமுல்படுத்துவதன்மூலம் சிறுவர் அலுவல்களுக்குப் பொறுப்பான அதமைச்சு ஏனைய நிறுவனங்களோடு இணைந்து சிறுவர் உரிமைகள் பாதுகாக்கப்படும் ஒரு நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான அதன் முயற்சிகளை பலப்படுத்த இலக்கு கொள்கிறது. இவ்விடயத்தில், சிறுவர் உரிமைகள் பற்றியும் அவற்றைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தையும் அறிந்துள்ள ஒரு அறிவாரந்த சமூகத்தை உருவாக்குதல் கலாசார மாற்றங்களின் பின்னணியில் சட்ட மாற்றங்களைப் பரிசீலித்தல் சிறுவர் உரிமைகளுக்காக வாதிடும் செயற்பாட்டாளர்களின் சமூக அங்கீகரிப்பிற்கு உதவுதல் ஆகிவற்றிற்கான தேவையை அமைச்சு இனங்காண்கிறது. |
| பொது பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உறுதிமொழியானது எவ்வாறு பங்களிக்கும்? | சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பதன் முக்கியத்துவம் பற்றிய அறிவை இக்கடப்பாடு அதிகரிக்கும். சிறுவர் தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ளும்போது அவர்களின் கருத்துகளுக்குச் செவிமடுப்பதற்கான நடத்தை மற்றும் வழக்கங்கள் சிறுவர்களைப் பயன்படுத்திப் பயன் பெறும் சம்பவங்கள் பற்றி அறிவிப்பதற்கு சமூகத்திற்கு வலுவூட்டுதல் சிறுவர்களுக்கெதிரான வன்முறைகளுக்குப் பங்களிப்புச் செய்யும் காரணிகளைப் பயன்மிக்கவகையில் தீர்த்தல் ஆகியவற்றை அது ஊக்குவிக்கும். |
| OGP விழுமியங்களுக்கு ஏன் இந்த உறுதிமொழி சம்பந்தப்படுகின்றது? | இக்கடப்பாடு சிறுவர் உரிமை மீறல் சம்பவங்கள் மற்றும் சிறுவர் உரிமைகளைப் பாதுகாத்தலுக்கான முன்னெடுப்புகள் ஆகியவற்றை இனங்காண்பதற்கான சமூக ஒன்றுதிரட்டல்மூலம் **சமூக பங்கேற்பு, வெளிப்படைத் தன்மை** மற்றம் **பொறுப்புக்கூறல்** ஆகியவற்றை மேம்படுத்துகிறது. |

| | |
|---|---|
| மேலதிக தகவல்: | இக்கடப்பாடுமூலம் வசதியேற்படுத்தப்படும் சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான பொறுப்புகள் சமூக விழுமியங்களை மேம்படுத்துவதற்கு உதவும். |

| சரிபார்க்கக் கூடிய வழங்கக்கூடியவையுடன் மைற்கல் நடவடிக்கை | ஆரம்ப திகதி: | முடிவுத் திகதி: |
|---|---|---|
| 1. புதிய சட்டங்களும் கொள்கைகளும் (உ.ம்: மாற்று பாராமரிப்பு் கொள்கை) அறிமுகப்படுத்தப்பட்டு அமுல்படுத்தப்படும் . | மார்ச் 2019 | மார்ச் 2020 |
| 2. கிராமிய, பிரதேச, மாவட்ட, மாகாண மற்றும் தேசிய மட்டங்களிலான சிறுவர் உரிமைகள் பாதுகாப்புக் குழுக்கள் வலுப்படுத்தப்படும். | மார்ச் 2019 | மார்ச் 2020 |
| 3. சிறுவர் உரிகைள் பாதுகாப்பு தொடர்பான சமூக விழிப்புணர்வு மேம்படுத்தப்படும். . | மார்ச் 2019 | செப்டெம்பர் 2020 |
| 4. நிறுவனமயப்படுத்தப்பட்ட சிறுவர்களை சமூகத்தில் மீள ஒருங்கிணைத்தல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளல்.. | மார்ச் 2019 | மார்ச் 2021 |

| தொடர்புத் தகவல்கள் | | |
|---|---|---|
| நடைமுறைப்படுத்தல் நிறுவனத்தில் பொறுப்பில் உள்ள நபரின் பெயர்: | | நடைமுறைப்படுத்தல் நிறுவனத்தில் பொறுப்பில் உள்ள நபரின் பெயர்: |
| பதவி நிலை, திணைக்களம் | | பதவி நிலை, திணைக்களம் |
| மின்னஞ்சல், தொலைபேசி | | மின்னஞ்சல், தொலைபேசி |
| சம்பந்தப்பட்ட ஏனைய செயற்பாட்டாளர்கள் | சம்பந்தப்பட்ட ஏனைய செயற்பாட்டாளர்கள் | நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம், மாவட்டச் செயலகங்கள், பிரதேசச் செயலகங்கள், கல்வி அமைச்சு, சுகாதார அமைச்சு, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை, சிறுவர் செயலகம். |
| | | சேவ் த சில்றன், புத்தாக்க மற்றும் பேண்தகு அபிவிருத்திக்கான மன்றம் (FISD), UNICEF, லீட்ஸ், FRIDSRO, SOS, வேர்ல்ட் வி'ன், பிளேன் ஸ்ரீ லங்கா, சிறுவர் நிதியம், சர்வோதயா, எமர்ஜ் லங்கா |

## 5. நடைமுறைப்படுத்தல் பேருபாயத்திட்டம்

முன்னேற்றத்தைக் கண்காணிக்கும் வகையிலும், தேசிய செயல் திட்டத்தின் பயனுறுதியுள்ள நடைமுறையாக்கத்திற்கு வழிகாட்டல் வழங்கும் வகையிலும் அமைச்சர்களைக்கொண்ட வழிகாட்டல் குழுவொன்று ஏற்படுத்தப்படும். இதற்கு மேலதிகமாக, சனாதிபதியின் செயலாளரினால் தலைமை தாங்கப்படுவதும், முக்கிய நடைமுறையாக்க முகவர் நிலையங்களின் அதிகாரிகளைக் கொண்டதுமான ஓர் அதிகாரிகள் குழு காலாண்டு இடைவெளிகளில் திறந்த அரசாங்கப் பங்குடைமை குறித்த இரண்டாவது தேசியச் செயல்திட்டத்தின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்து, கண்காணிப்பு மேற்கொள்ளும். இந்தக் கூட்டங்களில் சகல நடைமுறையாக்கல் முகவர்களினதும், இயைபுள்ள சிறு சமூக அமைப்புகளின் அங்கத்தவர்களினதும் பிரதான அதிகாரிகள் பிரசன்னமாகவிருப்பர். உறுதிமொழிகளை நடைமுறைக்கிடும் ஒவ்வொரு முகவர் நிலையத்திற்கும் அவர்களின் மைல் கற்களின் சாதனைகளை உறுதிப்படுத்தும் ஒரு கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுச் சட்டகம் ஆதரவு வழங்கும். தேசிய செயல் திட்டத்தின் முன்னேற்றம் காலாண்டு இடைவெளிகளில் இற்றைப்படுத்தப்பட்டு சனாதிபதி செயலகத்தின் வெப் தளமொன்றில் வெளியிடப்படும். இதற்கு மேலதிகமாக ogp.progress@gmail.com. என்பதனூடாக அரசாங்க உத்தியோகத்தர்களும், பிரசைகளும் செயல் திட்டம் சம்பந்தமான தமது கருத்துக்களைச் சமர்ப்பிக்கலாம். உத்தியோகபூர்வ தொடர்பாடல் நபராக கருமப்படும் சனாதிபதி செயலகத்தின் உத்தியோகத்தர் ஏனைய நடைமுறையாக்கல் முகவர்களுடனும், சிவில் சமூக நலனுரித்தாளர்களுடனும் ஒரு தொடரும் கலந்துரையாடலையும், கூட்டிணைப்பையும் பேணி உறுதிசெய்வார்.